சரஸ்வதி

ஆசிரியர். வ. விஜயபாஸ்கரன்

சரஸ்வதி

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

மலர் 2
இதழ் 8

ஆகஸ்டு 1956

துன்முகி
ஆடி

உள்ளே

நண்பர்களே!		2
அருள் வட்டம்	... அ. நடராஜன்	3
வேலைகொடுத்தவன் (சிறு கதை)	... ஜெயகாந்தன்	9
புதுமைப்பித்தன்	... தி. க. சிவசங்கரன்	17
பொறுக்குமணிகள்	... 'சிற்றெறும்பு'	23
கன்னட நாடகக்கலை	... 'ரசிகன்'	30
முன்ஷி பிரெம்சந்த்	... அமிருதராய்	33
ஒட்டும் - தீட்டும் (கவிதை)	... கு. சின்னப்பா பாரதி	37

★

அட்டைப்படம்:

லோகமான்ய பாலகங்காதர திலகர்

★

தனிப்பிரதி விலை அணு 2.　　ஆண்டு சந்தா ரூ. 1-8-0.

நண்பர்களே!

நமது காரியாலயத்தை 19, லேங்க்ஸ் கார்டன் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை-2 என்ற விலாசத்துக்கு மாற்றியிருக்கிறோம் என்பதை சென்ற இதழிலேயே அறிவித்திருந்தோம். இருந்தும் பல ஏஜண்டுகளும் வாசகர்களும் பழைய விலாசத்துக்கே கடிதங்களையும் மணியார்டர்களையும் அனுப்பிவருகிறார்கள். இதனால் கடிதப் போக்குவரத்துக்களைக் கவனிப்பதில் அநாவசியமாகக் காலதாமதம் ஆகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஆகவே தயவுசெய்து இனிமேல் **19, லேங்க்ஸ் கார்டன் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை-2** என்ற விலாசத்துக்கே கடிதங்களையும் மணியார்டர்களையும் அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

'சரஸ்வதி' இதழ்கள் தங்களுக்குத் தொடர்ந்து கிடைக்கிறதா? பத்திரிகையில் வரும் அம்சங்களைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன? வேறு என்னென்ன அம்சங்கள் சேர்க்கவேண்டும் என்பதைப் பற்றி எழுதுங்கள்.

'சரஸ்வதி' உங்கள் பத்திரிகை. சரஸ்வதியின் வளர்ச்சி உங்கள் கையில் இருக்கிறது. உங்கள் ஒத்துழைப்பைப் பரிபூரணமாக எதிர்பார்க்கிறோம்.

—நிர்வாகி.

அருள் வட்டம்-2

அ. நடராஜன்

பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதுபோன்றே கதிரவனும் தன்னைத்தானே மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றிக் கொள்கிருன். அவ்வாறு ஒரு முறை சுற்றிவருவதற்கு சூரியனின் நடுப்பகுதியில் சுமார் இருபத்தைந்து நாட்கள் ஆகின்றன; நடுப்பகுதியை விட்டு விலகிச் செல்லச் செல்ல, சுற்றும் நேரம் அதிகமாகிறது. சூரியனின் துருவங்களில் அது மிகவும் மெதுவாகச் (முப்பத்து நான்கு நாட்களில் ஒருமுறை) சுற்றிவருகிறது. இதிலிருந்து சூரியனின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வேகத்துடன் சுழலுவது எளிதில் விளங்குகிறது அல்லவா? வாயுக்களால் ஆகிய ஒரு பொருள் இவ்வாறுதான் இயங்கும். மிகவும் உயர்ந்த வெப்பநிலையில் சூரியன் இருக்கிறது என்றும் எல்லாப்பொருள்களும் அங்கு வாயுநிலையிலேயே உள்ளன என்றும் நாம் ஏற்கனவேயே தெரிந்துகொண்டிருக்கிரேம். ஆகையால், வாயுக்களால் ஆகிய சூரியன் பூமியைப் போன்று முழுவதும் ஒரே வேகத்துடன் சுழலாமல் இருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை. சூரியனின் ஒளிப்புரையின் பரப்பைக் கவனித்தால் கரும் புள்ளிகள் ஓர் இடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்குச் செல்வதைக் காணலாம். இப்புள்ளிகள் இடம் மாறுவதைக் கொண்டே சூரியனின் சுழற்சியை அறிஞர்கள் கண்டுகொண்டார்கள். மேலும் இப்புள்ளிகளின் துணைகொண்டு சூரியனின் ஒவ்வொரு பகுதியின் சுழற்சி வேகத்தைக் கணக்கிட்டு விடலாம். சீனர்களும் இந்தியர்களும் பழங்காலத்திலேயே இவற்றைக் கவனித்ததாகச் சரித்திரம் கூறுகிறது. புகைஏற்றிய கண்ணுடிவில்லைகள் வாயிலாகக் கவனித்தால் தொலைநோக்கியின் உதவி இல்லாமலேயே இவை புலப்படும். (சூரியனை நேராகவோ அல்லது தொலைநோக்கி வாயிலாகவோ கவனிக்கும்போது அதன் வெளிச்சத்தைக் குறைக்கக்கூடிய கறுப்புக் கண்ணுடிகளைப் பயன்படுத்தவேண்டும். இல்லாவிட்டால் சூரிய வெப்பம் காரணமாகக் கண்களுக்குக் கெடுதி நேரிடும்.) காலிலேயோ தான் செய்த தொலைநோக்கியின் வாயிலாக இப்புள்ளிகளைக் கவனித்து உலகிற்கு அறிவித்தார்; இப்புள்ளிகள் பதினென்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றி மறைகின்றன. இவை பல நூற்ருண்டு

களாக ஆராய்ச்சியாளர்களால் நன்கு கவனிக்கப்பட்டு வந்துள்ளன. சூரியப்புள்ளிகள் தொடக்கத்தில் பல மாதங்கள்வரை மிகக் குறைவாகவோ அல்லது தோன்ருமலேயோ இருக்கும். பிறகு சிறிது சிறிதாக இவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கிறது; ஏறக்குறைய நாலரை ஆண்டுகளில் இவை அதிகபட்ச வரம்பை அடைந்துவிடுகின்றன; மறுபடியும் சுமார் ஆறரை ஆண்டுகளில் படிப்படியாகக் குறைந்துவிடுகின்றன, மாறி மாறி இவை அதிகமாகவும் குறைவாகவும் காணப்படுகின்றன. இம்மாறுதல்களின் காரணங்களைப்பற்றித் தெளிவாக இதுவரை ஒன்றும் தெரியவில்லை. சூரியப் புள்ளிகளின் அளவு மிகமிகப் பெரியது; இவற்றின் குறுக்களவு 500 மைல் முதல் 50,000 மைல்வரை இருக்கும். 1892-ஆம் ஆண்டில் ஒரு புள்ளி 2,00,000 கோடி சதுர மைல் பரப்புள்ளதாய்த் தோன்றியதாம்!

சூரியப்புள்ளிகள் கதிரவனின் பிற பகுதிகளைவிடக் குளிர்ந்த நிலையில் உள்ளன. இவற்றைக் காட்டிலும் மிக்க ஒளியுள்ள பகுதிகள் சுற்றிலும் இருப்பதால்தான் இவை கறுப்பாகத் தெரிகின்றன. சூரியனின் மேற்பரப்பிற்குக் கீழிருந்து வாயுக்கள் சீறிக்கொண்டு மேலே வருவதால் இவை உண்டாகின்றன. மேற்பரப்பில் இவை அகன்று விரிந்து பரவுவதால் வெப்பம் குறைந்து குளிர்ந்த நிலையை அடைகின்றன. அதே சமயத்தில் சூரியனின் வேறு பகுதிகளிலிருக்கும் உஷ்ணமான வாயுக்களை இவை தம்முள் இழுத்துக்கொள்ளுகின்றன. இதன் விளைவாக இவற்றில் சுழற்சி ஏற்படுகிறது. சூரியப் புள்ளிகள் அதிக அளவில் தோன்றும்காலத்தில் பூமியில் உள்ள மின்சாரக் கருவிகள், காந்தக் கருவிகள், ரேடியோ முதலியன பாதிக்கப்படுகின்றன. இவ்விளைவுகள் 'காந்தப் புயல்கள்' எனப்படுகின்றன. சூரியனில் எழும் கிளர்ச்சிகள் காரணமாக, மின்னுருக்கள் (எதிர்மின்னூற்றலைச் சுமந்திருக்கும் 'எலெக்ரான்' துகள்கள்) தோன்றுகின்றன. இவை சுமார் இரண்டுநாள் கழித்துப் பூமியின் வாயு மண்டலத்தை அடைந்து மின்சார நிலைகளில் சில மாற்றங்களை விளைவிக்கின்றன. மேலும், இப்புள்ளிகள் அதிகமாகத் தோன்றும்போது பூமியின் துருவப் பிரதேசங்களில் பேரொளிக் காட்சி திகழ்கிறது. பூமியின் துருவங்களில் காந்த சக்தி ஒருமுகப்பட்டுள்ளது. சூரியனிடமிருந்து கிளம்பிவரும் மின்னுருக்கள் துருவங்கள்பால் வலித்திழுக்கப்படுவதால் இம் மின்னொளிக் காட்சி உண்டாகிறது எனக் கருதப்படுகிறது.

பூமி சூரியனைச் சுற்றுகிறது. சந்திரன் பூமியை வட்டமிடுகிறது. இவ்வாறு சுற்றிவருகையில் குறிப்பிட்ட சில இடங்களில் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் சந்திரன் வரும்

பொழுது அது சூரியனை மறைத்துவிடுகிறது. சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி வரும்போது பூமியின் நிழல் சந்திரன்மீது விழுகிறது; கிரகணங்களைப்பற்றிய இக்கருத்து நம் நாட்டினருக்குப் புதிது அன்று. கி. பி. 5-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்த ஆர்ய பட்டர் என்பவர் கிரகணங்கள் ஏற்படுவதைக் குறித்துப் பின்வருமாறு எழுதியுள்ளார்: 'சந்திரன் சூரியனுக்குக்கீழ் ஒரு மேகம்போல் வந்து மறைக்கிறான். அதனால் சூரிய கிரகணம் ஏற்படுகிறது. பூமியின் நிழலில் சந்திரன் வரும்போது சந்திரகிரகணம் உண்டாகிறது.' (தேவர்களும் அரக்கர்களும் பாற்கடலில் அமுதம் கடைந்தபோது மகாவிஷ்ணு மோகினி வடிவு கொண்டு அதைப் பகிர்ந்து அளித்ததாகவும் அப்போது ஓர் அரக்கன் விஷ்ணுவுக்குத் தெரியாமல் அமுதத்தைத் தின்றுவிட்டதாகவும் அதைச் சூரிய சந்திரர்கள் கண்டு விஷ்ணுவிடம் சொல்ல, அவர் வெகுண்டு அவ்வரக்கனை இரு துண்டுகளாக வெட்டிவிட்டதாகவும் ராகு, கேது, என்னும் அத்துண்டங்கள் தம் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள அவ்வப்போது சூரியச் சந்திரர்களை விழுங்கிவருவதாகவும் கூறும் புராணக்கதை நம் நாட்டில் ஒவ்வொருவருக்கும் தெரிந்ததே!) வானவீதியில் சூரியன் செல்லும் பாதையிலேயே சந்திரனும் சென்றால் ஒவ்வொரு அமாவாசையிலும் சூரிய கிரகணமும், ஒவ்வொரு பௌர்ணமியிலும் சந்திர கிரகணமும் உண்டாகவேண்டும். ஆனால் சந்திரனின் பாதை சூரியனின் வானவழிக்குச் சற்றுச் சாய்ந்திருப்பதால் பூமி, சூரியன், சந்திரன் அடிக்கடி ஒரே கோட்டில் வருவதில்லை. கோள்களின் இயக்க விதிகளை நன்கு அறிந்த வானவியல் அறிஞர்கள் இக்கிரகணங்கள் எப்போது நிகழும் என்பதைக் கணக்கிட்டு முன்னதாகவே அறிவித்துவிடுகின்றனர். பொதுவாகக் கிரகணங்களின் நிகழ்ச்சியைப்பற்றி இரு விதிகள் உண்டு. (1) ஓர் ஆண்டில் கிரகணங்கள் ஏழுக்கு மேற்படாது. (2) எந்த ஆண்டிலும் சூரிய கிரகணம் இரண்டிற்குக் குறைவில்லாமல் இருக்கும்.

கிரகணங்கள் முழுதாகவும் ஏற்படலாம். அல்லது சூரியனிலும் சந்திரனிலும் ஒரு பகுதி மட்டுமே மறைக்கப் படலாம். முந்தையது முழு கிரகணம் (பூரண கிரகணம்) என்றும் பிந்தையது (பார்ச்வ) பகுதி கிரகணம் என்றும் அழைக்கப் படுகிறது வானவியல் அறிஞர்களுக்கு பெரும் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி முழுச் சூரிய கிரகணம் ஆகும். ஏன் எனில், அந்நிலையில் மட்டுமே சூரியனைச் சுற்றியிருக்கும் வெளிப் பகுதிகளை நன்கு காணமுடியும். சூரியன் ஒளி வீசிக் கொண்டிருக்கும் போது அப்பகுதிகளைக் காண முடியாது. ஆதலால், சூரிய கிரகணம் முழுதாக ஏற்படும காலம்

சில விஞ்ஞானக் கருத்துக்களைப் பரிசோதிப்பதற்குத் தக்கதாய் இருப்பதால் அது தெரியும் இடங்களுக்கு விஞ்ஞானிகளை அனுப்புவது வழக்கம். சூரியனுக்கும் புதனுக்கும் இடையில் ஏதாவது கிரகம் இயங்குகிறதா என்பதைப்பற்றி ஆராய்வதற்கு முழுச்சூரிய கிரகண காலமே சரியானதாகும். பிக்கரிங், பெர்ரின், காம்பெல் ஆகிய வானவியல் அறிஞர்கள் நிகழ்த்திய ஆராய்ச்சிகள் அம்மாதிரி ஒரு கோளும் இல்லைஎன்பதை வலியுறுத்தின. முழுச் சூரிய கிரகணம் பூமியின் எல்லாப் பகுதிகளிலும் தெரியாது. பூமியின் மேற்பரப்பில் விழும் சந்திரனுடைய நிழலின் அகலம் ஏறக்குறைய ஐம்பது மைல் தான் இருக்கும். இந்த நிழல் படர்ந்து இருக்கும் இடத்திற்குள் இருந்தால்தான் முழுச் சூரிய கிரகணத்தை நாம் காண முடியும். முழுச் சூரிய கிரகணம், பகுதிச் சூரிய கிரகணம் என்பவை அன்றிச் சூரியனுக்கு மற்றொரு வகைக் கிரகணமும் உண்டு. சிலசமயங்களில் சந்திர மண்டலம் முழுவதும் சூரியனை மறைக்காது. சூரிய மண்டலத்தினுள்ளே அடங்கி விட்டால் சூரியனின் நடுப்பகுதியில் மட்டுமே சந்திரனின் நிழல் விழும். அப்பகுதியைச் சுற்றியுள்ள சூரிய மண்டலம் வளையம்போல் பிரகாசிக்கும். இத்தகைய கிரகணமே 'மோதிரகிரகணம்' எனப்படுகிறது. இவ்வகைக் கிரகணம் சூரியனுக்கே சிறப்பாக உள்ளது. சந்திரனைக்காட்டிலும் பூமி பெரிய அளவுள்ளது. ஆதலால் சந்திரனின் உருவம் பூமியின் நிழலைவிட ஒருபோதும் பெரிதாக இருக்க முடியாது. ஆதலால், சந்திரனுக்கு மோதிர கிரகணம் ஏற்படவே முடியாது.

முழுச் சூரிய கிரகணம் ஏற்படும்போது சூரிய மண்டலத்தைக் கவனித்தால் சூரியனிடமிருந்து எல்லாப் பக்கங்களிலும் சிவந்த சுவாலைகள் எழும்பி வீசுவதைக் காணலாம். இந்தக் காட்சி மிகவும் பயங்கரமானதாக இருக்கிறது. இந்தச் சுவாலைகளே சூரியனின் சுடர்க்கொழுந்துகள் எனப்படுகின்றன. இவை சூரியனைச் சுற்றியுள்ள ஆவி மண்டலத்தின் மேற்பகுதியிலிருந்து உயர எழும்பிக் கனலைக் கக்குகின்றன. இவை பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றன. சில சமயங்களில் இவை சூரியனிடமிருந்து பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலும் எழும்பி வீசுகின்றன. 1919-ம் ஆண்டில் முழுச் சூரிய கிரகணம் நிகழ்ந்த போது ஒரு சுடர்க் கொழுந்து 4,75,000 மைல் உயரத்திற்கு எழும்பிப் பரவியதாம்! சிறு சுடர்கள், சூரியனை மறைக்கும் நிழல் வட்டத்தின் ஓரங்களைச்சுற்றிப் பொருத்தப்பட்டிருக்கும் இரத்தினக் கற்கள் போல் அழகுடன் விளங்குகின்றன. இச்சுடர்க் கொழுந்துகளைப் பற்றி ஜீன்ஸ் என்னும் வானவியல் அறிஞர் "சூரியனின் உட்பகுதி ஆற்றலை விளைவிக்கும் மாபெரும் தொழிற்சாலை போன்றது. ஆற்றலினால் உண்

டாகும் வெப்பத்தைத் தாளமுடியாது உட்பகுதி அதை வெளிப்படுத்தித் துரத்தி விடுகிறது. இதுவே, ஆகாய வெளியில் வெப்பமாகப் பரவுகிறது. ஆனல் இதுகூட அவ்வெப்பத்தைத் துரத்தப் போதுமானதாக இல்லே. அங்கும் இங்கும் பல மைல் தூரம் வரை எழும் செந்நிறத் தீக்கொழுந்துகள் காணப்படுகின்றன. சூரியனின் மேற்பரப்பு வெளியிடுவதைக் காட்டிலும் மிக விரைவாக வெப்பம் உண்டாக்கப்படுகிறது. இதனல் தான் இந்தச் சுடர்க் கொழுந்துகள் யாவும் படைக்கப்பட்டன போலும்!'' என்று கூறுகிருர். சூரியனின் சுடர்க்கொழுந்துகள் இருவகைப்படும். அமைதியாக எரியும் சுடர்க் கொழுந்துகள் ஒருவகை; சீறி அலேந்து எரியும் சுடர்க் கொழுந்துகள் மற்ருெரு வகை. முதல்வகைச் சுடர்க் கொழுந்துகள் வெள்ளே மேகங்களேப் போன்ற உருவம் கொண்டு பொதுவாக மாருது நிலேத்திருக்கின்றன. சூரியப் புள்ளிகள் குறைவாக இருக்கும் காலத்தில் இவ்வகை காணப்படுகின்றன. இரண்டாவதுவகை சுடர்களே சீறி எழுந்து பல மைல் தொலேவுவரை வீசி எரிகின்றன. சூரியப் புள்ளிகள் மிகுந்து தோன்றும்போது இச் சுடர்கள் தோன்றிப் பல மைல் தூரம்வரை பரவும். இவை எவ்வாறு உண்டாகின்றன என்பதைப் பற்றிய முடிவான தகவல்கள் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லே.

முழுச் சூரிய கிரகண காலத்தில் சூரியனேச் சந்திரனின் நிழல் மறைத்து விடும் போது சூரியனேச் சுற்றி எல்லாப் பக்கங்களிலும் வெவ்வேறு தொலேவுவரை அழகான வெண்மை ஒளி சூழ்ந்து கண்ணுக்கு இனிய காட்சியாய்த் திகழ்கிறது. இந்த ஒளி வட்டம் சூரியனின் கிரீடம் அல்லது சிறு முடி எனப்படுகிறது. சூரிய ஒளி சிதறுவதனல் இது உண்டாகிறது. சூரியனின் நிரப்புரையை ஒட்டியிருக்கும் இச்சிறு முடியின் உட்பகுதி மஞ்சள் நிறமுள்ளதாய் இருக்கிறது! வெளிப்பகுதி வெண்மை ஒளியுடன் கூடியது. பொதுவாக இச்சிறு முடியின் ஒளி, முழுமதியின் வெளிச்சத்தில் பாதிக்கு மேற்படுவதில்லே. சூரியப்புள்ளிகள் மிகுதியாய்த் தோன்றும் காலத்தில் இச்சிறு முடி வட்டவடிவுள்ளதாக இருக்கிறது; அவை குறைவாக இருக்கும்போது சூரியனின் துருவங்களில் தட்டையாய் அமுங்கியும் நடுப்பகுதியில் அகன்றும் பருத்தும் உள்ளது. வால் நட்சத்திரம் அதனுடே எளிதாகவும் வேகம் குறையாமலும் ஊடுருவிச் செல்லும் அளவிற்கு அது மிகவும் மெல்லியதாக இருக்கிறது. அதன் இயல்பு இன்னமும் விளங்காத ஒரு புதிராகவே இருக்கிறது. சில நிலேகளில் அதன் வெப்பநிலே ஸெண்டிக்ரேட் அளவில் 10,00,000 டிகிரீ இருப்பதாகக் கருதப்படுகிறது.

சூரியன் மலேவாலியில் விழுந்த பின்னர் நிலவற்ற தெளிவான

ஓர் இரவில் மேற்கில் வான வெளியைக் கவனித்தால் மங்கலான ஓர் ஒளிக்கற்றை கூம்பு வடிவில் சூரியனிடமிருந்து புறப்பட்டு வருவது போல் கண்ணுக்குத் தெரியும். சூரியோதயத்திற்கு முன்னர்க் கீழ்த்திசையிலும் இக்காட்சியை நாம் பார்க்கலாம். இதை 'ராசி மண்டல ஒளி' என்று சொல்லுவார்கள். இந்த ஒளிக்கற்றையின் அகலம் தொடுவானத்திற்கருகில் அதிகப்பட்ச அளவுள்ளதாக இருக்கிறது. இதன் பாதை வான வீதியில் சூரியன் செல்லும் வழியிலேயே உள்ளது. இளவேனில் காலத்தில் மேற்கிலும் முன்கார் காலத்தில் கிழக்கிலும் இக்காட்சி நன்ருகத் தெரியும். கடகரேகைக்கும் மகரரேகைக்கும் இடையில் உள்ள பகுதிகளில் இவ்வொளியைத் தெளிவாகக் காணலாம். இவ்வொளியை ஆராய்ந்தால் இதன் நிறமாலையும் சூரிய ஒளியின் நிறமாலை போன்றே இருக்கிறது. உண்மையில் ராசி மண்டல ஒளி வீதியில் சூரியனின் பாதைக்கு அருகில் சிதறியிருக்கும் சிறு துகள்களால் பிரதிபலிக்கப்பட்ட சூரியஒளியே அன்றி வேறன்று. நிலவற்ற இரவில் தோன்றும் வெளிச்சத்தில் நூறில் அறுபது பங்கு மேலே கூறப்பட்டுள்ள ராசி மண்டல ஒளியே ஆகும்.

சூரியனைப்பற்றிய இந்த உண்மைகளை எல்லாம் படிக்கும் போது நம்மை அறியாமலேயே நம் உள்ளத்தில் ஒருவகை அச்சமும் இயற்கையின்பால் அன்பும் மலர்கின்றன. நிலவுலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் கதிரவனே ஆதாரமாக இருந்து வருகிருன். "கடவுளின் அருள் சின்னமாகவும் வல்லமைக்கு எடுத்துக்காட்டாகவும் ஒரு பொருளை மனிதன் சுட்டிக் காட்ட வேண்டும் என்ருல் ஒளி வட்டமான சூரியனை அன்றி வேறு எதுவாகவும் அது இருக்க முடியாது!" என்று ப்ரோக்டர் என்னும் அறிஞர் கூறியது எவ்வளவு பொருத்தமானது!

(முற்றும்)



சிறுகதை

வேலை கொடுத்தவன்

— ஜெயகாந்தன் —

ஆறுமுமான் கந்தன் வழக்கம் போல அந்த இடத்தில்-நாற் சந்திகள் கூடுமிடத்துக்குச் சற்றுத் தள்ளி இருக்கும் 'பஸ்-ஸ்டாப்' அருகே வந்து நின்றான். சம்மட்டி பிடித்துக் காய்ப் பேறிய விரல்கள், க்ஷவரம் செய்யப்படாத முகவாய் ரோமத்தை உரசின.......பலமாக, இன்னும் கொஞ்சம் அழுத்தி உரசின; பார்வை அலைந்தது.

'எங்கே அவளைக் காணோம்...' என்று மனம் துழாவியது. இரும்பின் கறை படிந்த அரை நிஜாரின் பைகளைத் துழவி ஒரு பீடியை எடுத்து வாயில் செருகிக்கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான். சற்றுத் தூரத்தில் நாகரிக உடையில் சாதாரண மனிதனின் உடலைவிட மோசமான தனது எலும்புக்கூட்டை மறைத்துக் 'கௌரவம் பண்ணிக்கொண்டிருந்த ஒரு யுவர் சிகரட்டைப் புகைத்துக் கொண்டிருந்தார். 'ஸார் கொஞ்சம் நெருப்பு......' என்று அவரிடம் போய்க் கையை நீட்டினான் கந்தன். முகத்தைச் சுளித்து அவனைப் பார்த்தார் அவர். பிறகு, தனது சட்டைப் பையிலிருந்து நெருப்புப் பெட்டியை எடுத்துக் கொடுத்தார். பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு நெருப்புப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்த கந்தன் அவருக்குப் புரியும் பாஷையில் 'டேங்ஸ்' என்று சொல்லி வைத்தான்.

அவர் அதற்குப் பதில் சொல்லாதிருந்தது அவன் உச்சரிப்பு சரியில்லாத காரணமன்று. அவனும் அதை எதிர்பார்க்கவில்லை; அவனுக்கு அதெல்லாம் தெரியாது

'சாமி...'—அவள் குரல் கேட்டது. கந்தன் திரும்பினான். சாமீ...' அந்த நாகரீகக் கோமகனிடம் கை நீட்டி யாசித்துக் கொண்டிருந்தாள் அவள். 'அவள் பிச்சைக்காரி!' அதை நினைக்கும்போது அவனுக்கு வந்த ஆத்திரம்...

'ஒரு அழகான இளம்பெண் பிச்சை எடுக்கலாமா?...சீசீ... இந்த உலகத்துக்குப் புத்தியே இல்லை. அவளுக்குக் கலியாணம் ஆகியிருக்க நியாயமில்லை.'—அவளை இதே இடத்தில் இதே கோலத்தில் அவன் பலமுறை பார்த்திருக்கிறான். பார்க்கும் போதெல்லாம் அவனுக்குக் கோபம் தான் வரும். அதுவுமல்லாமல் அந்தச் சிறுக்கி யார் யாரிடமோ பிச்சைக் கேட்டிருக்கிறாள்....இவனிடம் வந்து கேட்

'பதே இல்லே. இவனேயும் இவன் கருமான் கோலத்தையும் பார்த்தால் 'தருமப் பிரபு'போல் அவளுக்குத் தோன்றுமா, என்ன?— அப்படியே அவள் பிச்சைக் கேட்டால்கூட அவளுக்கு அவன் பிச்சை கொடுப்பானு என்பது சந்தேகம்தான். ஆனுல் அவளிடம் ஏதாவது பேசி இருப்பான்!

"சாமி..."

"போ...ஏதாவது கூலி வேலே செய்யறதுதானே.....'பெக்கர்ஸ் நியூஸன்ஸ்' அதிகமாப் போச்சு!"

"எங்கே சாமி வேலே கெடைக்குது?..." என்று சிணுங்கினுள் அவள். அதைக் கேட்டவுடன் கந்தனுக்கு பொறுமை கடந்தது.

"வேலே கெடச்சா செஞ்சி கிழிச்சிடுவியாக்கும்?..." என்று அவர்களிடையே குறுக்கிட்டான் கந்தன்.

"நீ என்ன பெரிய லெச்சாதிபதிப் பிரபுவோ? வேலே குடுக்க வந்துட்டே..." என்று அவளும் சீறினுள்.

"வேலே குடுத்தா செய்வியா?"

"ஓ!...நீ என்னவேலே வச்சிருக்கே?..." அவள் மௌனமாகக் கேட்டாள். அவன் முகவாயைத் தேய்த்துக்கொண்டே நின்ருன். ஒன்றும் பேசவில்லே. அவளேயே பார்த்தான்!

அதற்குள் கருமான் பட்டரையில் மணி அடித்தது......

"ஓ...மணி அடிச்சிட்டானே......" என்று நாற்சந்திக்கு அருகே உள்ள சிறிய சந்தினுள் நுழைந்து ஓடினுன்.

"வேலே குடுக்கறவரு மூஞ்சியெப் பாரு..." என்று அவள் சிரித்த சப்தம் அந்த அவசரத்தில்கூட அவன் செவிகளில் ஒலித்தது.

பட்டரையில் வேலே செய்துகொண்டிருக்கும்போதெல்லாம் அவன் மனம் அவளேப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது...

கந்தன் ஒரு அனுதைதான். அதற்காக அவன் பிச்சை எடுக்கமுடியுமா?—அவன் வம்சமே அந்தத் தொழில் செய்ததில்லே. 'பிச்சை!—சீ, அது ஒரு பிழைப்பா? இந்த உலகத்தில் பிச்சைக்காரத்தனம் எப்படி ஏற்பட்டிருக்கமுடியும்?...' என்று அவன் மனம் அடிக்கடி விசாரணை புரியும்.

அவனுல் கொள்ளேக்காரத்தனத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. பிச்சைக்காரத்தனம் சகிக்கமுடிவதாக இல்லே!

கையில் உள்ளவன் கொடுக்க மாட்டான். கொடுக்காததினுல் தான் அவன் கையில் இருக்கிறது. வக்கில்லாதவனுக்கு அது தேவை. இல்லாதவன் உள்ளவனிடம் உள்ளதைப் பறிப்பதைத் தவிர வேறுவழி இல்லே என்று நினேக்கிருன். அதுதான் கொள்ளே! ஆனுல் கையில் உள்ளவன் தர்மப்பிரபு என்றும், அவன் தர்மம்புரிந்ததினுல்தான் பிரபுவாக இருக்கிருன் என்றும், யாசித்தால் கொடுப்பான் என்றும் நம்பி அவனிடம் கையேந்தி நின்று அவன் கொடுக்காவிட்

டாலும் நம்பிக்கை இழக்காமல் மீண்டும் மீண்டும் கெஞ்சிக் கொண்டிருப்பது......சீ...சீ...... சகிக்கவில்லை!

'ஐயோ பாவம்! அவள் என்ன அழகாக இருக்கிறாள்...அந்தச் சிறுக்கி பிச்சையல்லவா எடுக்கிறாள்!...இந்தமாதிரிக் கழுதைகள் வேலை கொடுத்தாலும் செய்யாதுகள்...' இப்படி அவளைப்பற்றிய சிந்தனை ஓட்டம் அவன் வேலைகளைத் தடை செய்யவில்லை. அவன் உரமேறிய கரங்களில் உள்ள சம்மட்டி பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டங்களின்மீது யந்திரம் போல் தாளலயம் பிறழாது விழுந்துகொண்டுதானிருந்தது...

ஆனால் அவன் மனம் பிச்சைக்காரத்தனத்தின் தலைமீது விழும் அடிகளாகத்தான் அவற்றை எண்ணியது!

சாயங்காலம்.

வேலை முடிந்துவிட்டது.

அன்று சம்பள தினம்.

அவனுக்கு வாரச் சம்பளம் ஐந்து ரூபாய்தான். அவன் ஒண்டிக்கட்டை. அது போதும் அவனுக்கு. தனது தனிக்குடிசையில் இரவோடு இரவாக புகையும் அடுப்பு, காலையில் மிஞ்சும் பழைய சோறு, மத்தியானத்தில் நாயர் கடை மசால்வடையும் 'சிங்கிள் சாயாவும்'-இவனுடைய 'லிவ்விங் ஸ்டாண்டர்டு'க்கு அது போதும்.

ஐந்து ரூபாயை வாங்கிக் கொண்டு வெளியே வந்ததும் ஒரு 'சிங்கள் டீ' அடிக்கவேண்டும்போல் தோன்றியது.

சம்பளம் அல்லவா வாங்கி இருக்கிறான்!

டீ குடிக்க நாயர் கடைக்குச் சென்றான். போகும்போது கருப்பையா ஆசாரி எதிரில் வந்தான்.

''என்ன கந்தா... *'எழைப்பு செதா' ஒரு மூட்டை இருக்கு. ஒங்க பட்டரையிலே யாருக்காவது வேணுமான்னு கேட்டுச் சொல்லேன். எங்க வூட்லே கொண்டு போட்டுடுவேன்...... எனக்கும் செலவுக்குத் துட்டு வேண்டியிருக்கு'' என்றான் கருப்பையா ஆசாரி.

கந்தன் நின்றான்....

'எனக்குந்தான் தினம் ராத்திரியிலே அடுப்பெரிக்க விறகு வேண்டியிருக்கு. இதிலே ஒரு மூட்டை வாங்கிப் போட்டால் என்ன' என்று தோன்றவே அவனிடம் விலை பேச ஆரம்பித்து பேரம் தீர்த்து மூட்டையை வாங்கி விட்டான். மூட்டையைக் கொண்டு சேர்க்க வேண்டாமா?—அவனே தூக்கிக்கொண்டு போய்விடுவான்... அவன் நினைவு பிச்சைக்காரியின்பால் சென்றதால் சாலையோரத்தில் உள்ள 'தூங்கு மூஞ்சி' மரத்தடியில் தூங்கி வழிந்துகொண்டிருந்த அவளைக் கூப்பிட்டான்.

---

* பலகைகளை இழைக்கும்போது விழும் மரச் செதிள்கள். அடுப்பெரிக்க உதவும். இழைப்பு + செதிள் = 'எழைப்பு செதா'.

"காலையிலே என்னு கேட்டே?"

"நீ என்ன பெரிய லெச்சாதிபதிப் பிரபுவோ, வேலை குடுக்க வந்துட்டேன்னு கேட்டேன்" என்ருள் சற்று விறைப்புடன்.

"போடி பைத்தியக்காரி, லெச்சாதிபதிப் பிரபு எவனும் வேலை குடுக்கமாட்டான் இந்தக் காலத்திலே. போயிப் பாரு, கம்பெனி வாசற்படியிலே எல்லாம் 'வேலை காலி இல்லை'ன்னு போர்டு தொங்கும்."

"யோவ்...மரியாதையா பேசு ...போடி வாடின்னு பேசுறியே..." என்று சீறிஞள் பிச்சைக்காரி.

"ஒம்பேரு தெரியாதே...'

"எம்பேரு ராசாத்தி...பேரு தெரியாதுன்னு வாடிபோடின்னு சொல்றதோ?..."

"நீமட்டும்'நீ நீ'ன்னு என்னைச் சொல்லலாமோ? அந்தவெள்ளை வேட்டிக்காரங்களைமட்டும் சாமி சாமின்னு சொல்றே..."

"என் கிட்டே வந்து வம்பு குடுத்தா அப்படித்தான் சொல்லுவேன்..."

"இந்தாபாரு ராசாத்தி...சத்தியமா சொல்றேன்; இப்ப 'நா' வம்பு குடுக்க வரலை...வேலை குடுக்கத்தான் வந்திருக்கேன்."

"என்னய்யா கிண்டலா பண்றே?... மரியாதையா போயிடு..." என்று எழுந்தாள் ராசாத்தி.

'பாத்தியா...நீ அவசரப்படறியே...நெசமா வேலை குடுக்கத்தான் வந்திருக்கேன். அதோ கெடக்குப்பாரு அந்த 'செரா மூட்டை'யைத் தூக்கிக்கிட்டு வரணும். நீ கேக்கற கூலி கொடுக்கறேன்." ராசாத்திக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் முகத்தைப் பார்த்தாள். களங்கமற்ற அவன் முகத்தைப் பார்த்த பொழுது அவனை அவளால் சந்தேகிக்க முடியவில்லை.

"எங்கே கொண்டு போகணும்?"

"நீ கொண்டுவா...சொல்லறேன். தச்சுப்பட்டறையில் கிடந்த அந்தக் கோணிமூட்டையைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு அவன் பின்னே நடந்தாள் ராசாத்தி.

அவன் ஏதேதோ சந்து பொந்துகளிளெல்லாம் நுழைந்து கடைசியில் ஒரு அசிங்கம் பிடித்த சேரி வழியாக நடந்தான். அங்கே தோட்டிகள் வசித்து வந்தனர். அந்தப் பிரதேசத்தைத் தாண்டி தனியே ஒரு மூலையில் அவன் குடிசை இருந்தது.

அவன் திரும்பிப் பார்க்கும்போது ராசாத்தி மூட்டையின் கனத்தை மூச்சைப் பிடித்துத் தாங்கிக் கொண்டு தோட்டித் தெரு முனையில் மெதுவாக நடந்து வந்தாள். கந்தன் திரும்பி அவளருகே சென்ருன்.

"சரி, கொஞ்சம் நான் தூக்கியாறேன் குடு..." என்ருன்.

"முடியாது...இப்படி என்னைக் கஷ்டப்படத்தணும்னு நெனைச்சித்தானே செஞ்சே...நானே தூக்கியாறேன்" என்று அவள் வேகமாக நடந்தாள்.

"நீ கண்டவன் கிட்டே எல்லாம் கையை ஏந்தி, பல்லைக் காட்டிக்கிட்டு நிக்கறதை விட, இப்படி நீ கஷ்டப்படறதிலே எனக்குச் சந்தோஷம் தான்" என்றான் கந்தன்.

"நான் பிச்சையெடுக்கணும்னா பிச்சை யெடுக்குறேன்..." என்று அவன் பக்கம் திரும்பினாள் ராசாத்தி. அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது. அந்தச் சமயம் பார்த்து அவள் தலைச் சுமையைத் தன் தோளுக்கு மாற்றிக் கொண்டான் கந்தன். அவள் திகைத்து நின்றாள். அவன் கூட ஒரு நிமிஷம் திகைத்தான்.

கேவலமான பிச்சைக்காரிக்காக, தான் ஏன் இவ்வளவு சிரமப்பட வேண்டும்...என்ன இருந்தாலும் அவள் ஒரு பிச்சைக்காரி தானே! என்று அவன் நினைத்தான்.

இவன் ஏன் தன்னிடம் இப்படி நடந்து கொள்கிறான். வேறு ஏதாவது தப்பான செயலுக்கு முயற்சிக்கிறானா ? என்ன இருந்தாலும் இவன் ஒரு ஆம்பிளை தானே ! என்று அவள் நினைத்தாள்.

"ராசாத்தி...ஒனக்கு என்ன கூலி வேணும் ?"

"என்னவானாலும் சரிதான்."

"நாலணா குடுக்கட்டா..."

"சரி"

"அப்புறம் என்ன பண்ணுவே ?..."

அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"நான் உனக்கு எப்பவுமே இருக்கறமாதிரி ஒரு வேலை கொடுக்கட்டுமா ?"

"சரி..." அவள் பொம்மை மாதிரித் தலையாட்டினாள். இந்த நிலை அவளுக்குக் குழப்பமாய் இருந்தது. தன்னைப் பற்றி தன் நிலையைப்பற்றி நினைக்க நினைக்க அழுகை அழுகையாய் வந்தது.

செங்கான் கடையருகே அவள் தாய் 'கேவலமான தொழில்' நடத்துகிறாள். அவளையும் அதில் ஈடுபடுத்த அவள் முயற்சிக்கும் போது தாயை வெறுத்த ராசாத்தி கிருஷ்ணாம் பேட்டையில் இருக்கும் 'ஆயா' விடம் வந்தாள். 'ஆயா' பிச்சைக்காரத் தொழிலைப் பரிச்சயம் செய்து வைத்து விட்டு கண்ணை மூடி விட்டாள்.

பாவம், ராசாத்தி ஏது செய்வாள் ! பிச்சை யெடுக்கிறாள்.

அவள் தாயார் பரிச்சயம் செய்து வைக்க எண்ணிய தொழிலில் அவளைத்தள்ளி விட எவ்வளவோ முயற்சிகள் யார் யாரோ செய்து வருகிறார்கள். எப்படியோதப்பித்துக்கொண்டே வருகிறாள் இன்றுவரை.

அவள் தாயைப் பிரிந்தே பத்து நாட்கள் தானே ஆகின்றன.

ராசாத்திக்கு உள்ளூர இதைப்பற்றி யெல்லாம் நினைக்கையில் நடுக்கம்தான். அதனால் அவற்றை நினைப்பதே இல்லை !

இப்பொழுது கந்தன் அவள் நினைவுகளைக் கிளறி விட்டு விட்டான்.

குடிசைக்கு முன்னே மூட்டையை இறக்கிப் போட்டுவிட்டு மடியிலிருந்து ஒரு நாலணு நாணயத்தை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு அவள் முகத்தைப் பார்த்தான். அவள் முகம் சுண்டிப்போயிருந்தது.

"என்ன? கொறைவா இருக்கா......வேணும்னு கேளு!" என்ருன். அவள் அவன் முகத்தைப் பார்த்தாள். பார்வை கெஞ்சியது...

"என்ன வேணுமோ, கேளு!..." என்று குடிசைக் கதவைத் திறந்து மூட்டையை இழுத்து உள்ளே எறிந்தான்.

"எப்பவும் இருக்கிறமாதிரி ஒரு வேலே!..." அவள் குரல் கம்மி ஒலித்தது.

"நெசமாவா, ராசாத்தி...... அப்போ உள்ளே போ...பெருக்கிச் சுத்தம்பண்ணி அடுப்புப் பத்தவை...நான் போயி அரிசி வாங்கியாறேன்."

"ஐயையோ, நான் மாட்டேன்..."

"ஏன்...எனக்குச் சமைச்சுப் போடு, நீயும் சாப்பிட்டுக்கோ..."

"ஊஹூம்...எனக்குப் பயம்மா இருக்கு!"

"சீ, பைத்தியம்...நான் உனக்குப் பாதுகாப்பாகத்தான் இருப்பேன்...நீ என்கிட்டே வேலே செய்யறவ......நான் உனக்கு வேலே கொடுக்கிறவன். அவ்வளவுதான். தொழிலாளி முதலாளி உறவுதான்...நீ சமைச்சு முடிச்சு வெளியிலே வந்தப்பறம் தான் நான் குடிசைக்குள்ளே நுழைவேன்" என்று தைரியம் கூறினுன்:

"அதுவுமில்லாம நான் பகல் முழுதும் வேலேக்குப் போயிடுவேன்" என்ருன்.

"ராத்திரியிலேகூட வேணுமாணு அந்தக் கோயில்லே போயிப் படுத்துக்குவேன்......" அவளுடைய பயத்தை நீக்க, தான் ஒரு உண்மையான மனிதன் என்பதை நிலேநிறுத்த அவன் என்ன செய்யவும் தயாராயிருந்தான்.

ராசாத்தி இன்னமும் தயங்கி நின்ருள்.

"சரி......சரி, நீ......உள்ளே போயி சுத்தம்பண்ணி உலேவை. நான் போயி அரிசி வாங்கி வர்ரேன்" என்று ஓடினுன் கந்தன்.

அவன் போவதை நின்று பார்த்துக் கொண்டிருந்த ராசாத்தி வெகு நேரத்திற்குப் பின் குடிசைக்குள் நுழைந்தாள்.

அன்று இரவு அந்தக் குடிசைக்குள் ஒரு பெண்ணின் கரம் சோற்றுப்பானேயில், அகப்பை பிடித்துத் துழவுவதைக் கண்களில் நீர்கலங்க குடிசைவாயிலில் நின்று கவனித்துப் பெருமூச்சுவிட்டான் கந்தன்.

இருள் மண்டிக்கிடந்த கந்தனின் சிறு குடிசையினுள் ஒரு பெண்ணின் கரம் விளக்கேற்றி வைக்க ஐந்து நாட்களுக்கு மேலாகிவிட்டன.

அவள் பிச்சைக்காரிதான்; என்ருலும் பெண்! குடிசையில் லட்சுமிகரம் இருக்கத்தான் இருந்தது.

அன்று காலை கந்தன் வேலைக்குப் புறப்பட்டான்.

"அரிசி தீர்ந்துபோச்சு......" என்று குடிசை வாயிலில், கதவைப் பிடித்துக்கொண்டிருந்த ராசாத்தி அறிவித்தாள்.

"ஆமாம்......எனக்கும் தெரியும்!"

"ராத்திரிக்கு என்னத்தைச் செய்யறது?" என்று பழைய சோற்று மூட்டையை அவனிடம் கொடுத்தாள்.

"வாணும்! நீ இதை மத்தியானத்துக்குச் சாப்பிட்டுக்கோ...... நான் அங்கே ஏதாவது பார்த்துக்குவேன். சாயங்காலம் யோசிப்போம். சம்பளத்துக்கு இன்னும் ரெண்டுநாளு இருக்கே..."

"பரவாயில்லே எடுத்துக்கிட்டுப்போ..."

"வாணும்..." என்று சொல்லிவிட்டு அவன் தன்வழியே நடந்தான்.

ராசாத்திக்கு அன்று முழுதும் மனம் ஒரு நிலையிலில்லை. தனக்காக அவன் ஏன் சங்கடப்படுகிறான் என்பது புரியவே இல்லை. அவனுக்கு மட்டும் என்றால் அவன் சம்பாதனை போதும் என்பதும் அவளுக்குத் தெரியும். அவன் சுகத்தில், அவனுடைய தட்டுச்சோற்றில் தானும் பங்குக்கு வந்துவிட்டது போல் இருந்தது.

ஆனால் தனக்கு இப்படி ஒரு ஆதரவு கிடைத்ததை நினைக்கையில் ஒருபுறம் மகிழ்ச்சிதான். அவனுக்கு வேறு ஏதாவது எண்ணம் இருக்கலாமோ என்ற அச்சமும்கூட. இருந்தால்தான் என்ன என்ற சமாதானம். இருக்கவேண்டும் என்ற ஆசைகூட......ஆனால் அவனை எப்படி நம்புவாள்? பிறகு விரட்டிவிட்டால்?...

அதை நினைக்கும்போதுதான் அவனிடமிருந்து விலகி விலகிப் பழகினாள் ராசாத்தி.

அன்று மாலை அவன் இருளைச் சுமந்துகொண்டு வீடு திரும்பினான். குடிசைக்குள் அடுப்புப் புகையவில்லை. விளக்கு எரியவில்லை. வெளியே, மூட்டை கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் ராசாத்தி.

"ராசாத்தி.........இருட்டிலே என்ன பண்றே?"

"வெளக்குக் கொளுத்த நெருப்புப்பெட்டிகூட இல்லை..."

"இந்தா வெளக்கைக் கொளுத்து..." என்று தீப்பெட்டியையும் ஒரு பலகாரப் பொட்டணத்தையும் அவளிடம் கொடுத்தான்.

"இது என்னா?..."

"நம்ம நாயர்கடை பஜ்ஜி!"

"எனக்கு வேலை கொடுக்கலையே..."

"ஆமா..."

"வேலை இல்லாம நான் எதுக்கு இங்கே இருக்கணும்..."

"ஏன் இருக்கக்கூடாது?"

"வேலை இல்லாமெ வேலைக்காரிக்கும் எஜமானுக்கும் என்ன ஒறவு?..."

"ராசாத்தி...வேலைக்காரி, எஜமான்னு நெனைக்கறதுனாலேதான் வேலை இல்லாதது ஒனக்குத் தெரியுது..." என்று அவள்

கரத்தைப் பற்றினன். பொட்டணத்தைப் பிரித்து ஒருபஜ்ஜியை எடுத்து அவள் வாயருகே கொண்டுபோனன். அவள் அவன் பிடியை உதறவில்லை. வாயைத் திறக்க வில்லை. பார்வையை உயர்த்தி அவன் முகத்தைப் பார்த்தாள். கண்கள் கலங்கி இருந்தன.

"எனக்குப்பயம்மாஇருக்கே, ."

"என் உசிரு உள்ளவரை உன்னைப் பிரியமாட்டேன்... இது சத்தியம்"

"நீ சாப்பிட்டியா ?"

"சாப்பிட்டுத் தான் உனக்கும் வாங்கி வந்தேன்...நாளைக்குச் சம்பளம் கெடைச்சுடும்...இன்னும் ஒனக்குப் பயம் தெளியயலேயா?..."

சிறிது நேரம் அவர்களிடையே மௌனம். அவன் குடிசைக்கு வெளியே வந்து பீடி புகைத்துக் கொண்டு வான வெளியை வெறித்துப் பார்த்த வாறே நின்றிருந்தான்.

அவள் பலகாரப் பொட்டணக் காகிதத்தை வெளியே எறிந்து விட்டு கைகழுவினள்.

அவன் குடிசைக்குள் நுழைந்தான்.

அவளும் நுழைந்தாள்.

அவள் உடல் பயத்தால் நடுங்கியது

அவன் அவள் பயந்து நடுங்குவதை விரும்பவில்லை.

"சரி, நான் போயி கோயில்லே படுத்துக்கறேன்"......என்று வெளியே போக முயற்சித்தான்.

"வேணு...ம்" அவள் குரல் நடுங்கிற்று. எண்ணெய் இல்லாத விளக்கு திரி கருகியது. ஒளி 'குபுக்'கென்று குதித்து மறைந்தது.

"நீ தான் எனக்கு எஜமான்!" என்று அவள் குரல், உணர்ச்சி வெறியில் கரகரத்தது.

"நீ எனக்கு இன்னமுமா வேலைக்காரி ?"

"ஆமாம்.....வேலைக்காரிதான் ......பிச்சைக்காரி இல்லே." அவள் குரலில் ஒரு பெருமிதம்.

"நீ வேலைக்காரியுமில்லே; பிச்சைக்காரியுமில்லை........என் ராசாத்தி!......" என்ற அவன் குரல் அந்த இருளில் அவள் காதருகே வெப்பமான ஸ்வாஸத்துடன் இதமாக ஒலித்தது!

அவள் ஆனந்தத்தில் தன்னை மறந்து சிரித்தாள்.

"வேலை குடுக்கறவரு மூஞ்சியைப் பாரு!" என்று அவள் சிரித்தது அவனுக்கு நினைவில் வந்தது. அந்த இருளில் அந்த வேலைகொடுத்தவனின் 'மூஞ்சி'யைப் பார்க்க அந்த வேலைக்காரியால் முடியவில்லை. அவள்தான் நாண மிகுதியால் கண்களை இறுக மூடிக்கொண்டு விட்டாளே!

★

புதுமைப்பித்தன்

●

தி. க. சிவசங்கரன்

புதுமைப்பித்தன் மறைந்து கடந்த ஜூன் மாதம் 30ம் தேதியோடு 8 ஆண்டுகள் கழிந்துவிட்டன.

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் வழக்கம்போல் அவரது நினைவு நாளைக் கொண்டாடியிருக்கிறது.

1955 டிசம்பர், 1956 ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு மாத 'சரஸ்வதி' இதழ்களில் திரு. ஆர். கே. கண்ணனும், ஜூலை இதழில் திரு. ரா. ஹரியும் புதுமைப்பித்தனைப் பற்றித் தமது மதிப்பீட்டை வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் நானும் புதுமைப்பித்தனைப் பற்றிச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முதலில் புதுமைப்பித்தன் வாழ்ந்த காலத்தைப் பற்றியும், அக்காலத்தில் அவரது வாழ்க்கை நிலை பற்றியும் சில விவரங்களை நினைவில் வைத்துக் கொள்வோம்.

புதுமைப்பித்தன் 1906ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் தேதி பிறந்தார்; 1948ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதி மறைந்தார். அவர் வாழ்ந்த காலம் 42 ஆண்டுகளும், 2 மாதமும்; அதாவது சுமார் 43 ஆண்டுகள்.

உலக சரித்திரத்திலும், இந்திய சரித்திரத்திலும் இவை மிக முக்கியமான ஆண்டுகள் ஆகும்.

1911ல் டில்லி தர்பார், 1917ல் நவம்பர் புரட்சி, 1930ல் உப்பு சத்தியாக்கிரகம், 1933ல் ஜெர்மனியில் ஹிட்லர் ஆட்சி, 1934ல் மத்திய சட்டசபைத் தேர்தல், 1936ல் மாகாண சட்ட சபைத் தேர்தல் (ராஜாஜி மந்திரி சபை), 1938ல் இரண்டாம் மகாயுத்தம், 1942ல் ஆகஸ்டு போராட்டம், 1947ல் இந்திய சுதந்திரம்—ஆகிய சரித்திரப் பிரசித்திபெற்ற நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

இந்தக் காலத்தில் தமிழ் இலக்கிய உலகத்தையும் நாம் சிறிது கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

1921ல் பாரதி அமரர் ஆனார்; இன்றுபோல் அன்றும் 'சுதேசமித்திரன்' தினசரி நடந்து வருகிறது; 1930-உப்பு சத்தியாக்கிரக எழுச்சியை யொட்டி, தமிழ் இலக்கியத்திலும் ஒரு புது எழுச்சி உண்டாகிறது; 'சுதந்திரச் சங்கு' 'காந்தி', 'மணிக்கொடி' 'ஆனந்த விகடன்', 'கலைமகள்' 'நவசக்தி' ஆகிய

அரசியல், இலக்கிய சஞ்சிகைகளும், 'தினமணி'ப் பத்திரிகையும் தோன்றுகின்றன.

இந்தப் பத்திரிகைகளின் தோற்றத்தால் தமிழ் இலக்கியத்தின் உருவத்திலும், உள்ளடக்கத்திலும் ஒரு பெரிய மாறுதல் ஏற்படுகிறது. எளிய, இலக்கியச் சுவை மிகுந்த, ஜீவனுள்ள தமிழில் ஏராளமான கட்டுரைகளும், நவநவமான அழகும், நுணுக்கமும் கொண்ட ஆயிரக்கணக்கான சிறு கதைகளும் தோன்றுகின்றன. தமிழ் இலக்கியம் தேசிய உருவத்தையும், ஜனநாயக உள்ளடக்கத்தையும் பெறுகின்றது.

இந்தக் காலகட்டத்தைப்பற்றி புதுமைப்பித்தன் கூறுவதைக் கேளுங்கள் :

"1930-ம் வருஷத்துக்குப் பின் உப்பு சத்தியாக்கிரகத்தின் இலக்கிய அலையாக ஒரு புது வேகம் இலக்கியத்தில் ஏற்பட்டது. அதாவது எதையும் சிரிக்கச் சிரிக்க எழுதவேண்டும் என்று ஒரு பாணியை வகுத்து அந்தத் துறையில் சிலர் இறங்கித் திறமைகளைக் காட்ட முயன்றார்கள். இவர்களுள் பிரதானஸ்தர் கல்கி. இவர்களுக்குச் சிரிப்பு மூட்டக்கூடிய தன்மையில் எழுத வேண்டும் என்பதே பிரதான லட்சியம். ஹாஸ்யச் சுவை என்பது இயல்பாக அமைய வேண்டிய விவகாரமாதலால், வரிந்து கட்டிக்கொண்டு சிரிக்க வைக்க முயலுவது போட்டோவுக்காகச் சிரித்தமாதிரியாகத்தான் அமையும். கல்கியும், பிறரும் மேல்நாட்டு ஹாஸ்ய சாம்ராட்டுகளை மொழிபெயர்த்துத் தந்தார்கள். அவற்றை அனுசரித்தும், ஒட்டியும், பெயர்த்தும் எழுதினார்கள். கல்கி பிராபல்யத்துக்கு வந்தது அவர் சிரிக்கச் சிரிக்க எழுதுவார் என்பதிலிருந்துதான். ஆனால் பிற்காலத்தில் அவர் சிறு கதைத் துறையில் இறங்கியபொழுது அவரது எழுத்துக்களில் மருந்துக்குக் கூட சிரிப்பு இல்லாமல் போனதற்குக் காரணம் ஹாஸ்யம் இவருக்கு இயல்பான குணம் அல்ல என்பது தான். ஆனால் ஹாஸ்யமாக கதை எழுதக் கூடியவர்கள் தமிழில் உண்டு. அவர்கள் இருவர்; 'எஸ். வி. வி'யும், 'கொனஷ்டை'யும். எஸ். வி. வி. யைவிட கொனஷ்டையில் கலையம்சம் ரொம்பவும் நயமாக இருக்கும்; கதைப்பாணி புதிதாக இருக்கும். இந்த ஹாஸ்ய யுகத்தின் வேகம் ஒடுங்கும் நிலையில்தான் இன்னும் ஒரு பேரலை எழுந்தது. அதில்தான் சிறுகதை தமிழில் பூரண வடிவம் பெற்றது. இதைச் சிறப்பாக மணிக்கொடி யுகம் என்று சொல்ல வேண்டும்.

"இக் காலத்தில்தான் சிறு கதைக்கு இலக்கிய அந்தஸ்து ஏற்பட்டது. பிச்சமூர்த்தி, கு. ப. ரா, பி. எஸ். ராமையா, சிதம்பர சுப்பிரமணியன் முதலியவர்களும், நானும் கதைகள் எழுத ஆரம்பித்தோம். வாழ்வுக்குப் பொருள் கொடுப்பதுதான் கலை. சிறு கதை, வாழ்வின் பலசூட்சுமங்களையும் எழுத்தில் 'நிர்மாணித்துக் காண்பித்தது.

'பரமசிவன் வந்து வந்து வரங் கொடுத்துப் போவார், பதிவிரதைக் கின்னல்வரும் பழையபடி தீரும்' என்றிருந்த நிலைமை மாறி, நிலாவும், காதலும், கதாநாயகனுமாகச் சோபித்த சிறுகதைகள் வாழ்வை,உண்மையை நேர் நின்று நோக்க ஆரம்பித்தன" ('புதுமைப் பித்தன் கட்டுரைகள்'—ஸ்டார் பிரசுரம்)

வாழ்வை, உண்மையை நேர் நின்று நோக்கவேண்டும் என்பதை லட்சியமாகக் கொண்ட மணிக்கொடி எழுத்தாளர்களின் தலைவன் புதுமைப்பித்தன்.

இந்த லட்சியத்தின் விளைவாகவே, பக்த குசேலா, நாசகாரக் கும்பல், துன்பக் கேணி, மனித யந்திரம், பொன்னகரம், இது மிஷின் யுகம், கல்யாணி, வாடாமல்லிகை, கவந்தனும் காமனும், நிசமும் நினைப்பும், செல்லம்மாள், கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், மகாமசானம், சுப்பையா பிள்ளையின் காதல்கள், நியாயந்தான், ஆண்மை, ஒருநாள் கழிந்தது, தெரு விளக்கு, நினைவுப்பாதை ஆகிய புதுமைக் கதைகளை அவர் சிருஷ்டித்தார்.

புதுமைப் பித்தனின் கதாபாத்திரங்கள், கருத்து, தமிழ்நடை எல்லாமே இலக்கியச் சநாதனிகளை ஒரு கலக்குக் கலக்கின.

பரங்கிப் புண் பெற்ற பறைச்சியையும், தெருவோரத்து விபசாரியையும், ஓட்டல் சிப்பந்தியையும், வர்த்தக குமாஸ்தாவையும், கிராமத்துப் பண்ணையாரையும், முதலாளித்துவ நாகரீகத்தின் சின்னமான ஒட்டுப் பொறுக்கியையும், பாலிய விதவையையும், நாற்சந்தியில் செத்துக்கொண்டிருக்கும் பிச்சைக்காரனையும், கடவுளிடம் ஜீவிய சந்தா வசூலிக்கும் பத்திரிகாசிரியனையும், எழுத்தாளனை ஏமாற்றும் பிரசுரகர்த்தாவையும் புதுமைப்பித்தன் கதாபாத்திரங்கள் ஆக்கினர்; இந்தப் பாத்திரங்களின் வாயிலாக நிலப்பிரபுத்துவத்தின் கொடுமையையும், வளர்ந்துவரும் முதலாளித்துவத்தின் அநீதியையும், அநாகரீகத்தையும் அம்பலப்படுத்தினர்; பழமைவாதிகள்மீது கண்டனக் கணைகளை ஏவி, கைகொட்டிச் சிரித்தார்; பழமைவாதிகளும், வேடதாரிகளும் வெட்கப்பட்டார்கள்; வெகுண்டெழுந்தார்கள்; 'புதுமைப்பித்தன் கலைமரபு தெரியாதவர், பண்பாடு அறியாதவர்; பச்சையான சூனுமானு (சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்)' என்றெல்லாம் அவர்கள் தூற்றத் தொடங்கினர்கள்; எதிர்க்கச்சை கட்டினர்கள்; தங்களால் முடிந்தமட்டும் இலக்கியத்துறையில் புதுமைப்பித்தனைத் தாக்கவும் செய்தார்கள்.

ஆனால், புதுமைப்பித்தன் எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சவில்லை; உண்மையும், உயிர்த்துடிப்பும், புதுமையும், கலையழகும் கொண்ட அவரது படைப்புகளை இளைஞர் உலகமும், சமுதாய முன்னேற்றத்தில் அக்கறை கொண்டோரும் வாழ்த்தி வரவேற்றனர்.

தம் கதைகளுக்குக் கிடைத்த வரவேற்பைப்பற்றி புதுமைப் பித்தன் கூறுவதைக் கேளுங்கள்: "தன் பலம் தனக்குத் தெரியாது என்பது வெகு ஜன வாக்கு; அதே மாதிரி தன் பலவீனமும், விசித்திர பேதங்களும் பிறர் கண்ணுக்குத் தெரிவதுபோல் தனக்குத் தெரியாதென்பதையும் வெகுஜன வாக்காகக் கொள்ள வேண்டும். ஏனென்றால், முந்திய வசனத்தின் உட்கிடை பிந்திய வியாக்கியானம். நல்லதும் சோடையுமாகச் சுமார் 200 கதைகள் எழுதிவிட்டு, அப்புறம் அவற்றின் தராதரத்தைப்பற்றிக் கவனிப்பது எழுதினவருக்கு ரசமான பொழுதுபோக்கு.

"என்னுடைய கதைகளைப் பொறுத்தவரை அமிதமான பாராட்டும் பரவசமும் ஒரு சார்; மற்றொருபுறம் பலத்த மனப்பூர்வமான கண்டனம். இந்த இரண்டும் என்னுடைய கதைகள் பெற்றுள்ள கவர்ச்சிகள். ஒரு பரம ரசிகர் என்னுடைய கதைப் புஸ்தகத்தைக் கண்டவுடன் "இந்த மனிதன் எப்பொழுது கதை எழுதுகிறதை நிறுத்திக்கொள்வான்" என்று ஆவலுடன் கேட்டார் அந்தப் பரம ரசிகருக்குத்தான் என்னுடைய புத்தகத்தை—அவருடைய கொய்னுமாத்திரையை—சமர்ப்பிக்கப் போகிறேன். மற்றொரு கலை நுணுக்கவாதி, "இவர் என்ன சூனு மானுவா?" என்று கேட்டார். என் கட்சி பேச ஆசைப்பட்ட ஒருவர் "அவரும் நம்மைப்போல் ஒரு மனிதர் தான்" என்று தெளிவுபடுத்திக் கொடுத்தார். இதேமாதிரிதான் பரவசமும் பாராட்டுதலும். அவையும் தன்னை மறந்த 'சாமியாட்ட'மாக இருக்கிறது.

"என் கதைகளில் உள்ள கவர்ச்சிக்கு ஓரளவு காரணம் நான் புனைந்துகொண்ட புனைப் பெயராகும். அது அமெரிக்க விளம்பரத் தன்மைவாய்ந்திருக்கிறது என்பதை இப்போது அறிகிறேன். நான் எடுத்தாளும் விவகாரங்கள் பலர் வெறுப்பது; சிலர் விரும்புவது.

"நான் கதை எழுதுகிற சீர் சிறப்பு எல்லாம் இந்தமாதிரி தான் என்று வைத்துக்கொள்ள வேண்டாம். அதாவது 'நான், எழுதவேண்டியதுதான் பாக்கி. அது நேராகப் பத்திரிகையின் பக்கங்களில் போய் உட்கார்ந்து கொள்வது நிச்சயம் என்று கருத வேண்டாம். அப்படி ஒன்றும் இல்லை. ஒரு காலத்தில் என் கதைகளைப்போல பத்திரிகைகளில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டவை வேறு இருக்கவே முடியாது. நான் இப்பொழுது பிரசுரித்துள்ளவற்றின் அளவுக்கு ஏறக்குறையச் சமமான எண்ணிக்கையுள்ள கதைகள், அவை எழுதப்பட்ட காலத்திலிருந்த பத்திரிகைக் காரியாலயங்கள் எல்லாவற்றையும் க்ஷேத்திர தரிசனம் செய்து விட்டுத் திரும்பியவையாகும்."

(பு. பி. கட்டுரைகள்-ஸ்டார் பிரசுரம்)

மேற் குறித்தவற்றி லிருந்து, எவ்வளவு எதிர்ப்புக்கும்

வெறுப்புக்கும் இடையில் புதுமைப்பித்தன் கதைகள் பிரசுரமாயின என்பது தெளிவு.

இவ்வளவு எதிர்ப்பும் வெறுப்பும் இருந்தும் புதுமைப்பித்தன் கதைகளுக்கு மவுசு ஏன்?

காரணம்; புதுமைப் பித்தன் எழுத்துக்களிலுள்ள கலையம்சந்தான்; அவரது சிருஷ்டிகளில் காணப்படும் ஜீவத்துடிதுடிப்பும் பூரணத்துவமும் தான்.

புதுமைப்பித்தனுடைய சிருஷ்டித்திறன் வியக்கத் தகுந்தது; மேதாவிலாசம் பொருந்தியது; அவரது ஒவ்வொரு கதையும் ரஸத்துணுக்கு என்றே சொல்ல வேண்டும. நெஞ்சில் உரமிருந்ததால், நேர்மைத் திறம் இருந்ததால், வாழ்வைப் படம் பிடிக்க வேண்டும் என்னும் சத்திய ஆவேசம் இருந்ததால், புதுமைப்பித்தனுடைய சிருஷ்டிகளில் ஒரு கம்பீரம், ஒரு வீரியம் இருந்தது. தமிழ்ப் பண்பாட்டில் வேரூன்றி, உலக இலக்கியங்களையும் கற்றுத் தேர்ந்த கலையுள்ளம் அவருடையது. எனவே அவர் எழுத்தில் ஒரு மோகன லாகிரி இருக்கிறது. அவருடைய கட்டுக்கோப்புத் திறனும், கலை நயமும், மாற்ருரையும் மதி மயங்கச் செய்தன; செயலற்றுப் போகச் செய்தன. பழமைப்பித்தர்களின் 'பாச்சா'பலிக்கவில்லை!

தமிழ் இலக்கியத்தில் 'சிறுகதை' என்னும் பகுதி தோன்றி சுமார் 60 ஆண்டுகள்தாம் ஆகின்றன. புதுமைப்பித்தன் சொல்வது போல் "தமிழுக்குச் சிறுகதையும் புதிது, நாவலும் புதிது, தமிழ் இலக்கியத்தில் வசனநடையும் புதிது". இந்தப் புதுமையிலும் புதுமை விளைத்தவர் புதுமைப்பித்தன்!

தமிழில் சிறுகதை வளர்ந்த விதத்தைப்பற்றிப் புதுமைப்பித்தன் கூறுவதைக் கேளுங்கள்:-

"தமிழில் சிறுகதை வளர்ந்த காலத்தை மூன்று பகுதியாகப் பிரிக்கலாம்.

செல்வகேசவராய முதலியார் (அபிநவக் கதைகள் என்ற தொகுதியை எழுதியவர்) காலம் முதல் வ.-வெ. சு. ஐயர் காலம் வரை ஒரு பகுதி. இதை வெறும் சோதனைக் காலம் என்று சொல்ல வேண்டும்.

இதற்கடுத்தபடியாக வ வெ. சு. ஐயர் யுகம் என்று சொல்ல வேண்டும். தமிழில்சிறுகதைக்கு உயிரும் உருவும் கொடுத்தவர் அவர் தான். ஒரு விதத்தில் இவரைச் 'சிறுகதையின்பிதா' என்று ஆங்கில மரபை ஒட்டிக் குறிப்பிடலாம். இவரது கதைத் தொகுதியான 'மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்' என்பதிலும், இவர் நடத்திய 'பால பாரதி' என்ற பத்திரிகையில் எழுதிய 'ராஜகோபாலன் கடிதங்கள்' என்பனவற்றிலும் அபூர்வமான பல கதைகள் உண்டு......

"இதற்கு அடுத்த யுகத்தில் சிறுகதை தமிழில் பூரணவடிவம் பெற்றது. இதைச் சிறப்பாக மணிக்கொடி யுகம் என்று சொல்லவேண்டும். இக்காலத்தில் தான் சிறுகதைக்கு இலக்கிய அந்தஸ்து ஏற்பட்டது. பிச்ச

மூர்த்தி, கு. ப. ரா., பி. எஸ். ராமையா, சிதம்பர சுப்பிரமணியன் முதலியவர்களும் நானும் கதைகள் எழுதத் ஆரம்பித்தோம்........"

மணிக்கொடி யுகத்தில் தமிழ்ச் சிறுகதைக்குப் பூரண உருவையும், உயிர்ப்பையும அளித்த முதல்வன் புதுமைப்பித்தன் என்று தாராளமாகக் கூறலாம். இதற்கு அவருடைய படைப்புக்களே சான்று.

புதுமைப்பித்தனின் சாதனைகள் என்ன? தமிழ் இலக்கியத்திற்கு அவர் செய்த நன்மைகள் யாவை?

* புதுமைப்பித்தன் தமது படைப்புக்களால் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தினர். தமிழ் இலக்கிய பாரம்பரியத்தைச் செழுமைப் படுத்தினர்.

* தமிழ் சிறுகதையை உலகத்துச் சிறுகதைகளுக்கு ஒப்பாகத் தலைநிமிர்ந்து நிற்கச்செய்தார்

* 'அனுபவத்துக்கு நேர் முரணை விஷயங்களை ஒதுக்கி விட்டு, நடைமுறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் ஒன்றுமில்லை' என்னும் யதார்த்தவாதக் கொள்கையை தமிழ்ச் சிறுகதை உலகில் ஸ்தாபித்தவர் அவர்.

* சாதாரண மனிதர்களின் வாழ்வுக்குச் சிறுகதையில் இடமளித்து,முதலாளித்துவக் கொடுமையையும், நிலப்பிரபுத்துவ அநாகரிகத்தையும் அம்பலப் படுத்தியவர் அவர்.

* புதுமைப்பித்தன் அநீதியின் விரோதி; அற்பத்தனத்தின் எதிரி; ஆஷாடபூதிகளின் பகைவன்; அல்லற்பட்டு அழுந்துவோரின் ஆப்த நண்பன்; அவர் சிருஷ்டித்தது மக்கள் விரோத இலக்கியமல்ல; மனிதாபிமான இலக்கியம்!

* புதுமைப்பித்தனின் இலக்கியம், ஜனநாயக இலக்கியம்; தமிழ்ச் சிறுகதைகளின் சரித்திரத்தில் ஒரு புதிய மாறுதலை, புரட்சியைத் தோற்றுவித்தவர் புதுமைப்பித்தன்.

இதற்காக நாம் அவருக்கு உள்ளன்புடனும், தன்னடக்கத்துடனும், பெருமிதத்துடனும் நன்றி செலுத்த வேண்டும்.

தமிழன்னையின் தவப்புதல்வர்களில் ஒருவர் புதுமைப்பித்தன் தமிழ் மொழி வாழவும், தமிழ் இலக்கியம் செழித்துக் கொழிக்கவும் தன்னையே தியாகம் செய்தவர் புதுமைப்பித்தன்.

புதுமைப்பித்தன் எழுத்துக்களில், யதார்த்தவாதத்தில், தத்துவ விசாரத்தில் எத்தனையோ குறைபாடுகள் உண்டு. இருந்தாலும் அவர் நமது பாராட்டுதலுக்கு உரியவர் தான்; போற்றுதலுக்குத் தகுந்தவர் தான். இதில் சிறிதும் ஐயமில்லை.

இதுவரை புதுமைப்பித்தனின் குணங்களைக் கூறினேன்; அவரது குற்றங்களையும் எடுத்துக் கூறவேண்டியது என் கடமை. அப்படியானல்தான் புதுமைப்பித்தனைப் பற்றி ஒரு சரியான முடிவுக்கு வாசகர்கள் வரமுடியும்.

(தொடரும்)

பொறுக்கு மணிகள்

★

சிற்றெறும்பு

சுருங்கச் சொல்லும் வித்வத

உட்ரோ வில்ஸன் என்ற பிரசித்தி பெற்ற அமெரிக்க ஜனாதிபதியை, ஒரு முறை ஒரு நண்பர், "நீங்கள் 10 நிமிஷப் பிரசங்கம் செய்ய எவ்வளவு காலத்திற்கு முன்னால் தயார் செய்துகொள்ளுவீர்கள்" என்று கேட்டார்.

வில்ஸன்: இரண்டு வாரம்.

நண்பர்: ஒரு மணி நேரப் பேச்சுக்கு?

வில்ஸன்: ஒரு வாரம்.

நண்பர்: இரண்டு மணி நேரப் பேச்சுக்கு?

வில்ஸன்: இதோ இப்போதே தயார்.

*   *   *

கடன்காரனுக்குப் பதில்

பத்திரிகைகளுக்கு எழுத வேண்டுமென்றால், காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுத வேண்டும். அப்பொழுதுதான் அச்சுக் கோர்ப்பதற்குச் சவுகரியமாக இருக்கும். அதனாலேயே, "காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்படும் விஷயங்களையன்றி மற்றவை கவனிக்கப்பட மாட்டா" என்று, பெரும்பாலும் பத்திரிகாசிரியர்கள் அறிவிக்கிறார்கள்.

மார்க் ட்வென் என்ற பிரபல ஹாஸ்ய எழுத்தாளர், வாலிபத்தில் ஒரு பத்திரிகாலயத்தில் ஆசிரியராக இருந்தார். வறுமையும் கடனும் அவரைச் சூழ்ந்தன. கடன்காரர்களின் 'பில்'கள், கட்டுக் கட்டாய்த் தினந்தோறும் வந்து குவியும். மார்க் ட்வென் சிறிதும் கவலைப்படாமல், அத்தனை 'பில்'களையும் குப்பைக் கூடையில் போட்டு விடுவார்.

ஒரு நாள், ஒரு கடன் 'பில்' காகிதத்தை ஒதுக்கித் தள்ளிய போது குமாஸ்தா, "ஸார், அதன் பின்பக்கத்தைப் படியுங்கள். பணத்தை உடனே நீங்கள் அனுப்பாவிட்டால், கேஸ் போடுவதாக அதில் எழுதியிருக்கிறது" என்று எச்சரித்தார்.

"ஓ! அதை அவனுக்கே திருப்பி அனுப்பி விடும். 'இரு பக்கத்திலும் எழுதப்படும் விஷயங்கள் கவனிக்கப்பட மாட்டா' என்ற நமது முத்திரையை அதிலே குத்திவிடும்" என்றார் மார்க் ட்வென்.

*   *   *

சரியான பாடம்

கிழக்கிந்தியக் கம்பெனியில் உத்தியோகம் பார்த்த பெரியதுரை ஒருவருக்கு, இந்தியர் என்ருல் இளக்காரமாம். அடிக்கடி இந்திய சிப்பந்திகளை அடித்து விடுவார். அவர்கள் கோர்ட்டுக்குப் போவார்கள்; இவர் அபராதம் கட்டுவார். தம் சமையல்காரனிடம் ஒரு சமயம் கோபம் கொண்டார். அபராத உபத்திரவத்துக்குத் தப்ப எண்ணிஞர். சமையல்காரனை யாருமில்லாத ஒரு அறைக்குள் அழைத்துச் சென்ருர். அறையை உட்புறம் தாளிட்டுப் பூட்டிஞர். "மாஜிஸ்திரேட் உபத்திரவம் இல்லாமல், இப்போது உன்னை நான் உதைக்க முடியும். இங்கே யாரும் சாட்சி கிடையாது" என்று கர்ஜித்தார்.

நடுநடுங்கிய சமையல்காரன் "அது சரிதானுங்க. சாட்சி வேண்டாமுங்க. வேறெதுக்கும் யாரையாவது மூனுவது மனுசங்களைக் கூப்பிடுங்க" என்று கெஞ்சிஞன்.

"முடியாது" என்று கறுவி விட்டு, ஒரு பெரிய சவுக்கையெடுத்து, சமையல்காரனை அடிக்கத் தொடங்கிஞர். இந்தியன் நல்ல முரடன். துரையின் சவுக்கைச் சட்டென்று பிடுங்கிக் கொண்டான். துரையின் உடம்பெல்லாம் ரத்தம் பீறிட, வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டான். துரைக்குப் புத்தி வந்துவிட்டது. அது முதல், இந்தியர்களிடம் அவர் நடந்து கொள்ளும் திஞுசே தலைகீழாய் மாறிவிட்டது. இந்த நிகழ்ச்சியை 1839-ஆம் ஆண்டில் மேஜர் எச். பெவான் என்பவர் சொல்லியுள்ளார்.

* * *

சரியான பதில்

போர் முனையில் நிகழும் சகல விவரங்களையும் துளி கூட விடாமல் உடனுக்குடன் தமக்குத் தெரிவிக்க வேண்டும் என்று, அமெரிக்க ஜனுதிபதி லிங்கன் உத்திரவிட்டிருந்தார். இது மிக் ஸெல்லான் என்ற தளபதிக்குப் பிடிக்கவில்லை. அவர் குறும்புத்தனமாய்ப் பின் வரும் தந்தியை, லிங்கனுக்கு அனுப்பிஞர்:

" ஜனுதிபதி லிங்கனுக்கு,
இப்போதுதான் ஆறு பசுமாடுகள் எங்களிடம் சிறைப்பட்டன. அவைகளை நாங்கள் என்ன செய்வது?
—ஜார்ஜ் டி. மிக்ஸெல்லான்"

ஜனுதிபதியும் தாமதமின்றி தட்சணமே பின்வருமாறு பதில் தந்தி யடித்தார்.

" தளபதி
ஜார்ஜ் டி. மிக் ஸெல்லானுக்கு,
பிடிபட்ட ஆறு பசுமாடுகளையும் தானே?......உடனே பால் கறந்துவிடுங்கள்.
—ஏ. லிங்கன்.",

* * *

மேதையின் ரகஸ்யம்

மோஜார்ட் என்பவர் அபூர்வமான சங்கீத மேதை யாவார். அவருடைய அற்புத

மான சாகித்தியங்கள் உலகப் பிரசித்தமாகும்.

"அரிய சாகித்தியங்களை எப்படி இயற்றுவது?" என்று ஒரு முறை அவரை ஒரு வாலிபன் கேட்டான்.

"நீயோ மிகவும் வாலிபமாயிருக்கிறாய். முதலில் எளிய சிந்துகளைப் புனைந்து பாரேன்" என்றார் மோஜார்ட்.

"ஆனால், நீங்கள் மட்டில், அருமையான சாகித்தியங்களைப் பத்து வயதிலேயே இயற்ற ஆரம்பித்து விட்டீர்களே?" என்றான் வாலிபன்.

"உண்மைதான். ஆனால், 'எப்படி?' என்று நான் யாரையும் கேட்கவில்லை" என்று பதில் அளித்தார் மோஜார்ட்.

* * *

விசித்திர ஸ்டிரைக்

பஸ்கள், டிராம்கள் முதலியவற்றில் வேலைநிறுத்தம் நடக்கும்போது, பொது ஜனங்களுக்குத் தொல்லையாகிறது; அசௌகர்யம் உண்டாகிறது அதனால் அவர்களே வேலை நிறுத்தக்காரர்களைச் சில சமயம் திட்ட நேருகிறது. அந்தத் தைரியத்தில் முதலாளிகள் பிடிவாதமாய் இருந்துவிடுகிறார்கள் அல்லவா? இதற்கு இடம் கொடாமல், சாங்கிலியில் ஒரு முறை, பஸ் வேலை நிறுத்தக்காரர்கள் ஒரு யுக்தி செய்தார்களாம் அவர்கள் வண்டிப் போக்கு வரத்துக்களை ஒழுங்காக நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஜனங்களிடம் கட்டணம் மாத்திரம் வாங்கவில்லை. இனும் 'ஸெர்வீஸ்' நடத்தலானார்கள்! அதனால், பொதுஜனங்களுக்குத் தொல்லையில்லை; முதலாளிகளுக்கோ பணநஷ்டம். எப்படி வேலை.

* * *

பதிலுக்குப் பதில்

வெண்டல் பிலிப்ஸ் என்னும் அமெரிக்கப் பிரமுகரின் கொள்கைகளைப் பிடிக்காத ஒரு பாதிரியார், ரெயிலில் அவரை ஒரு சமயம் சந்தித்தார்.

"நீர் தானே பிலிப்ஸ்?" என்று கேட்டார் பாதிரியார்.

"ஆம்" என்றார் பிலிப்ஸ்.

"நீக்ரோக்களுக்குச் சுதந்திரமளிக்க வேண்டுமென்று சொல்லுபவர் நீர் தானே?"

"ஆம்"

"அப்படியானால், இங்கே ஏன் பிரசாரம் செய்கிறீர்? நீக்கிரோக்கள் இருக்கும் ஊருக்குப் போய், அங்கே பிரசாரம் செய்வது தானே!"

பிலிப்ஸ் கொஞ்சநேரம் பேசாமல் இருந்தார். பிறகு, அவரை நோக்கி, நீங்கள் பாதிரி தானே?" என்றார்.

"ஆம்" என்றார் பாதிரியார்.

"நரகத்தில் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பவர்களைக் கரையேற்றுவதுதானே உங்கள் வேலை?"

"ஆம்."

"அப்படியானால், இங்கே ஏன் இருக்கிறீர்கள்? அங்கே போகிறதுதானே!"

* * *

இலக்கண வேலி!

ஒரு முறை, ஜோஹன் கிறிஸ்தோவர் காட்ஷெட் என்ற பிரபல ஜெர்மன் அறிஞர், பிரிட்டிஷ் ஸ்தானுதிபதியாகிய மிட்ஷெலுடன் ஷேக்ஸ்பியரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

" நாடகத்துக்கு அரிஸ்டாட்டில் சொன்னதுதான் சட்டம். ஒரு நாடகத்துக்கு ஐந்து அங்கங்கள் இருக்க வேண்டுமென்று அவர் சொல்லியிருக்கிருர். ஷேக்ஸ்பியருக்கு அது தெரியவில்லை; மனம் போன போக்கில் எழுதி யிருக்கிருர்" என்ருர் அவர்.

மிட்ஷெல்சிரித்துக்கொண்டே "நல்லது. அரிஸ்டாட்டில் ஒரு வேதாந்தி என்பதை மறந்துவிட்டு, அவரை ஒரு தையல்காரராக வைத்துக் கொள்ளுவோம். சட்டையும், கோட்டும், நிஜாரும் ஐந்து கெஜத்துக்குள்ளேயே தைக்கவேண்டும் என்று அவர் சொல்லுகிருர். ஆனுல் நீர் சற்று உயரம். பருமனுங்கூட; அவர் விதியை மீற உமக்குத் தைரியமில்லையானுல், உமக்குக் கோட்டும் சட்டையும் மாத்திரமே கிடைக்கும். அரிஸ்டாட்டில் சொல்லுகிருரே என்பதற்காக நிஜார் இல்லாமல் திரிவீரா ?" என்ருர்.

* * *

சாதுர்யம்

ஒரு முறை, காலஞ்சென்ற திரு சத்தியமூர்த்தி அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். பொது மக்களிடையே கல்வியறிவைப் பரப்ப வேண்டும் என்றும், தமிழ் வளர்வதற்கு அதுவே சிறந்த வழியென்றும் அவர் கூறினுர். பேசும்போது தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களிலிருந்து பல அற்புதமான மேற்கோள்களை எடுத்துக்கூறி, சபையோருக்கு மகிழ்ச்சி உண்டாக்கினுர்.

திரு சத்தியமூர்த்தியவர்கள் சமஸ்கிருதத்திலிருந்து மேற்கோள் எடுத்துக் காட்டுவது, ஒருவருக்குப் பிடிக்கவில்லை. அவர் எழுந்து நின்று, "உங்களுக்குச் சமஸ்கிருதத்தின் மேல் பிரியமா, தமிழ் மேல் பிரியமா? சொல்லுங்கள்" என்ருர். பதில் சொல்லுவதற்கு திரு. சத்தியமூர்த்தியா யோசிப்பவர்.

"நான் ஒரு எதிர்க் கேள்வி போடுகிறேன் உங்களுக்குத் தாயார் மேல் பிரியமா, தகப்பனுர் மேல் பிரியமா? சொல்லுங்கள்" என்ருர்.

கேள்வி கேட்டவர் இதற்குப் பதில் சொல்லவில்லை.

திரு. சத்தியமூர்த்தி மேலும் கூறினுர்: "தாயார் மேல் பிரியமா, தகப்பனுர் மேல் பிரியமா என்று என்னை யாராவது கேட்டால், 'இரண்டு பேர் மேலும் எனக்குப் பிரியந்தான்' என்று உடனே நான் பதில் அளிப்பேன். சமஸ்கிருதம் என் தந்தை; தமிழ் என் தாய்."

* * *

வந்த காரணம்

சிவாஜியின் மகுடாபிஷேகத்தை காண்பதற்காக, 1674-ஆம் வருஷம் ஆக்ஸெண்டன் என்

பவரின் தலைமையில் ஒரு ஆங்கிலத் தூதுகோஷ்டியார் ராயகட்டத்துக்குச் சென்றார்கள். அவர்களுக்கு மாமிச உணவுகள் சப்ளை செய்யும்படி ஒரு கசாப்புக் கடைக்காரனுக்கு, சிவாஜி உத்திரவிட்டார்.

இந்த ஆங்கிலத் தூது கோஷ்டியார் திரும்பிச் செல்லும்போது இவர்களைப் பார்ப்பதற்கு அனுமதி வேண்டுமென்று, அந்தக் கசாப்புக் கடைக்காரன் கேட்டுக் கொண்டான். அனுமதியும் கிடைத்தது.

கசாப்புக் கடைக்காரன் தங்களை வந்து கண்டபோது, ஆங்கிலேயர், மிக மரியாதையாக, "என்ன வேலையாக வந்தீர்கள் ?" என்று விசாரித்தார்கள். கசாப்புக் கடைக்காரன், சிறிது நேரம் வரையில் அவர்களை உறுத்துப் பார்த்து விட்டு, பிறகு "விஷேசம் ஒன்றுமில்லை. என்னுடைய மற்ற வாடிக்கைக்காரர்கள் அத்தனை பேரும் சேர்ந்து பல வருஷ காலத்தில் தின்ற மொத்த மாமிசம் அத்தனையையும் விட, அதிக மாமிசத்தை, ஒரே மாதத்தில் தின்றிருக்கிறார்களே ; இந்த மனிதர்கள் யார் என்று பார்க்கவே வந்தேன்" என்றான்.

* * *

ராஜ வைத்தியம் !

பீஜப்பூர் சுல்தான் இப்ராஹீம் அடில்ஷா என்பவர் இருபத்து நான்கு வருஷங்கள் ஆட்சி புரிந்தார். அதன் பின்பு ஏதோ வியாதி வந்தது. பல வைத்தியர்களை, சுல்தான் கூப்பிட்டனுப்பினார். அவர்களில் எவரும் சுல்தானைக் குணம் செய்ய முடியாததால், சிரச்சேதம் செய்தோ யானையின் காலில் இடறிவிட்டோ, அவர்களை எல்லாம் கொலை செய்து விட்டார் சுல்தான். இந்தமாதிரி வைத்திய தொழிலைவிட ஓட்டம் பிடிப்பதே மேல் என்று எண்ணி, நகரிலுள்ள மற்ற வைத்தியர்கள் அத்தனை பேரும் ஊரை விட்டுக் கிளம்பி விட்டார்கள். கடைசியில் சுல்தான், வைத்திய உதவி எதுவும் இல்லாமலே மாண்டுபோக வேண்டியதாயிற்று !

* * *

தந்திரப் பேச்சு

பிரெஞ்சுப் புரட்சியின்போது, ஒரு தெருவில் சிப்பாய்கள் போக முடியாதபடி பொதுஜனங்கள் கூடிவிட்டார்கள். அவர்களைச் சுட்டுக் கலைக்கும்படி, படைத்தலைவன் உத்திரவிடப் போனான். அச்சமயம் இளைஞனை கீழ் உத்தியோகஸ்தன் ஒருவன், தலைவனிடம் சென்று, "கலையும்படி இந்த ஜனங்களிடம் முதலில் நான் பிரசங்கம் செய்து பார்க்கிறேன்" என்றான். "சரி; செய்து பார்" என்றான் தலைவன். வாலிப உத்தியோகஸ்தன் மரியாதைக்கு அடையாளமாகத் தன் தொப்பியை எடுத்து விட்டு, ஜனங்களைப் பார்த்து, "இங்கே இருக்கக் கூடிய கனவான்கள் எல்லோரும் தயவு செய்து விலகிப்போக

வேண்டுகிறேன். ஏனென்றால், இங்குள்ள காலிகளையெல்லாம் சுடும்படி எங்கள் தலைவர் உத்திரவிட்டுள்ளார்" என்றான். உடனே, எவ்விதக் குழப்பமின்றி, ஜனங்கள் அத்தனை பேரும் அகன்று விட்டார்கள்.

* * *

ராஜாதி ராஜா

மாஜி வங்காள கவர்னர் லார்டு லிட்டன், காலஞ் சென்ற ஜெயப்பூர் மகாராஜாவைப் பற்றிய ஒரு ரசமான கதையை, தமது புத்தகம் ஒன்றில் வெளியிட்டிருக்கிறார்.

ஜெய்பூர் சமஸ்தானத்திலிருந்த சகல டெலிபோன்களையும் எடுத்து விடும்படி அந்த மகாராஜா உத்திரவு போட்டு விட்டாராம். அதற்கு மகாராஜா சொன்ன காரணம் இதுதான்: "ஏதோ ஒரு மணி அடிக்கும் என்று தெரிகிறது. அதற்கு அர்த்தம் யாரோ ஒருவர் என்னிடம் பேச விரும்புகிறார் என்பதாகும். அது யாராவது ஒரு துரையாக இருக்கலாம். தாம் பேசினால், நான் உடனே அவருக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று அவர் எதிர்பார்ப்பார். என் வழக்கமோ, எந்தக் கேள்விக்கும் ஒரு வருஷத்துக்கு முன் பதில் சொல்லுவதில்லை. ஆகையால், என் சமஸ்தானத்தில் டெலிபோன்களே வேண்டியதில்லை; அவைகளையெல்லாம் எடுத்து விடுங்கள்."

* * *

அழகால் வந்த வினை

ஒரு கலைமான் தெளிந்த சுனை ஒன்றில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. அப்போது தனது பரந்த கொம்புகளின் அழகைத் தண்ணீரில் பார்த்துப் பெருமிதம் அடைந்தது. ஆனால் தனது மெலிந்த கால்கள் அந்த அழகைக் கெடுப்பதாக நினைத்தது. ஆஹா! எவ்வளவு கம்பீரமான கொம்புகள்! என்ன அழகாக தலைமீது படர்ந்திருக்கின்றன. அவை கொடுக்கும் சோபை தான் என்ன? ஆனால் இந்தச் சூம்பிப்போன கால்களைப் பார்க்கும்போது தான் எனக்கு வெட்கமாக இருக்கிறது" என்று அங்கலாய்த்துக் கொண்டு திரும்பிப் பார்த்தது. வேடர்களும் வேட்டை நாய்களும் தன்னை நோக்கி ஓடிவருவதைக் கண்டது. உடனே எடுத்தது ஓட்டம்! அந்த வேட்டைக்காரர்களிடம் இருந்துஎந்தக்கால்களைக்கண்டு வெட்கம் அடைந்ததோ அந்தக் கால்கள் உதவி செய்தன. கால்களின் உதவியால் வேகமாக ஓடி காட்டுக்குள் நுழைந்தது. ஆனால் மேற்கொண்டு வேகமாக ஓடமுடியாமல் அதன் பரந்த கொம்புகள் புதர்களிலும் கிளைகளிலும் முட்டி இடையூறு செய்தன. இதனால் சீக்கிரமாக நாய்கள் வந்து அதைப் பிடித்துக் கொன்றன. சாகும்போது. "நான் ஒரு முட்டாள்! கொம்புகளால் வந்த வினை இது. இந்தக் கால்கள் என்னைக்

காப்பாற்றியிருக்குமே!" என்று ஏங்கியது.

—ஈசாப்.

அதிக ஆசை அதிக நஷ்டம்

ஒருநாள் ஒட்டகை பிரம்மாவிடம் சென்று குறை கூறியது. காளைமாட்டுக்கு கொம்பு இருக்கிறது. சிங்கத்திற்கும், புலிக்கும், பயங்கரமான நகங்களையும் கோரப் பற்களையும் கொடுத்திருக்கிறீர்கள். இதனுல் மற்றவர்கள் இவைகளைப் பார்த்து பயமும் மரியாதையும் கொள்ளுகின்றன. எனக்கு அம்மாதிரி எதுவுமே கொடுக்காததால் எல்லோரும் என்னை அவமரியாதை செய்கிருர்கள் என்று அலுத்துக்கொண்டது. இதைக் கேட்டு பிரம்மாவுக்குக் கோபம் வந்தது. ஒட்டகையைப் பார்த்து "கொஞ்சமாவது உனக்குப் புத்தியிருந்தால், மற்ற மிருகங்களுக்குக் கொடுக்காத சில அனுகூலங்களை உனக்குக் கொடுத்திருப்பதை அறிந்து கொண்டிருக்கலாம். நீ அறிவில்லாமல் குறை கூறியதற்காக உன் காதுகள் சிறியனவாய்ப் போகக்கடவது" என்று சாபமிட்டார்.

—ஈசாப்.

கோழைத்தனம்

ஒரு குட்டிமான் கலைமானைப் பார்த்துக்கேட்டது: "இதென்ன நாயைக் கண்டு இப்படிப் பயப்படுகிருய்? நீ எவ்வளவு பருமனுக இருக்கிருய்; பலவானுக இருக்கிருய். நாயைவிட வேகமாக ஒடவும் உன்னுல் முடியும். பரந்த கொம்புகள் வேறு இருக்கின்றன. இவ்வளவு இருந்தும் ஏன் நாயைக் கண்டு பயப்படுகிருய்? நீ மட்டும் தைரியமாக நின்று எதிர்த்தால் நாய்கள் ஒடியே விடும்"

இதைக்கேட்ட கலைமான், "நீ சொல்லுவது உண்மைதான். நானும் கூடத்தான் எவ்வளவோ முறை இம்மாதிரி யோசித்து நாய்களை எதிர்க்கத் தீர்மானித்ததுண்டு. ஆனுல் நாய்களின் குரலைக் கேட்டவுடனேயே அந்தத் தைரியமெல்லாம் எங்கேயோ பறந்து போய் விடுகின்றன" என்று பதிலளித்தது.

—ஈசாப்.



கன்னட நாடகக் கலை

'ரசிகன்'

கன்னட நாடகக் கலைக்கு அடிப்படையான வித்து கன்னட கவிதை இலக்கியங்களிலேயே இருந்து வந்திருக்கிறது. நாடக அம்சம் இல்லாத கன்னட கவிதை இல்லை என்று கூடச் சொல்லலாம். காவியங்களை வெகு சுலபமாய் நாடகங்களாக மாற்றிவிடக்கூடியபடி அவைகளின் நாடக அம்சங்கள் நிறைந்திருக்கின்றன.

கன்னட கிராம நாடகங்கள் பெரும்பாலும் புராண, இதிகாச, சம்பவங்களையே விஷயங்களாகக் கொண்டவை. யக்ஷகான, பயலாட்டா ஆகியவை பரம்பரையான கிராமிய நாடக வகைகளாகும்

முன் காலத்தில் கன்னட நாடக அரங்கு வெறும் மேடையாகத்தானிருக்கும். திரைகள், தட்டிகள் முதலியவை கிடையாது. நடிகர் மேடையில் ஏறினால், அரங்கில் நுழைந்ததாக அர்த்தம். தேவர்களும் அசுரர்களும் வெகு தூரத்திலிருந்து ஆடம்பரமாக உள்ளே வருவார்கள். சபையோர்களைத் தாண்டிக் குறுக்காகக் கூட வருவார்கள். நடிகர்களுக்ென்று தனியாக 'வசனம்' எதுவும் கிடையாது. கிராமப் பாடகரோ அல்லது, மதிநுட்பமுள்ள நடிகரோ தான் அவ்வப்போது வசனங்களை இசைத்துப் பொருத்தமாகப் பேசிவிடுவார். "மித்திரவிந்த கோவிந்தா" என்பது தான் இப்போது கிடைத்துள்ள மிகப் புராதன நாடகம்.

கிராம வாசிகள் தான் நாடகம் நடிப்பார்கள். நாடகக் கலைஞர்களாகத் தொழில்

நடத்துபவர்கள் கிடையாது. ஆனால், சென்ற நூற்றாண்டில் நாடகத் தொழில் நடத்தும் கலைஞர் கோஷ்டிகள் ஏற்பட்டன. 1848-ல் சாங்லியில் கன்னட நாடகம் ஒன்று நடத்தப்பட்டது. தற்கால மராத்திய நாடகக் கலை வளர்ச்சிக்கு அது தான் ஆதி காரணம் என்று கூறப்படுகிறது.

நாடகக் கலைஞர் கோஷ்டிகள் ஏற்பட்டதால் கிராம நாடகங்களில் மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. ஆனால், அதற்கு மாறாக, அக்கோஷ்டிகள் தான் கிராம நாடகங்களைச் சிறிது மாற்றி, புதிய பாடல்களைச் சேர்த்து, திரை முதலிய உபகரணங்களுடன் நாடகங்களை நடத்தின. அவை ஊரூராய்ச் சுற்றிவந்து கன்னட நாடகக் கலையை வளர்த்து வந்தன.

சென்ற நூற்றாண்டு முதல் கன்னட இலக்கியத் துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது அதனால் நாடகக் கலையில் பெரும் அபிவிருத்தி ஏற்பட்டது. வரதாச்சார், குப்பி வீரண்ணா; கருட சதாசிவராவ், மாஸ்டர் வாமனராவ், முதலிய சிறந்த நாடகக் கலைஞர்கள் தோன்றினார்கள். நாடகக் கலைஞர்களின் அந்தஸ்தும் உயர்ந்தது.

ஆங்கில பாஷைத் தொடர்பு ஏற்பட்ட பின் பல ஆங்கில நாடகங்கள் கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. ஆனால், அவை அரங்கில் நடிக்கப்படவில்லை. மைசூர் சமஸ்தானத்தின் ஆதரவில் சமஸ்கிருத நாடகங்கள் கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. சாகுந்தலம், ரத்னாவளி, முதலியவை மொழி பெயர்க்கப்பட்டதோடு பங்களூர் அமெச்சூர் நாடகக் கோஷ்டியால் நடிக்கவும்பட்டன.

சென்ற முப்பது வருஷ காலத்தில் மற்றுமொரு மாறுதல் ஏற்பட்டது. சமஸ்கிருத நாடக மொழி பெயர்ப்புகள் தவிர, மேனாட்டு நாடகங்களின் தழுவல்களும் வெளிவரலாயின. ஆலிவர் கோல்ட்ஸ்மித்தின் "ஷீ ஸ்டூப்ஸ் டு கான்கர்" என்னும் நாடகத்தை கேரூர் வாசுதேவாச்சார் "பதீவசீகரணம்" என்னும் பெயரில் மொழி பெயர்த்தார். சமூக வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் பல நாடகங்களுக்கு அது வழிகாட்டியாக இருந்தது. ஸ்ரீ நாராயணராவ் "ஸ்திரீ தர்ம ரகஸ்யம்" என்னும் நாடகத்தை எழுதினார். கைலாசம் எழுதிய "தெலுகட்டி" மூலம் கன்னட நாடகக் கலை ஸ்திரமான அடிப்படை பெற்று விட்டது. ஸ்ரீ கே சிவராம காமத் கன்னட நாடகங்களையும் "ஆப்பரா" நாடகங்களையும் இயற்றினார். சென்ற 30 வருஷ காலத்தை நவீன கன்னட நாடகக் கலையின் பொற்காலம் என்று குறிப்பிடலாம். பிரபல நாடகங்கள் எழுதப்பட்டன. உலகத்தின் சிறந்த கலைஞர்களுடன் ஒப்பிடக்கூடிய பெருமைமிக்க நாடகக் கலைஞர்கள் தோன்றி விட்டார்கள். பெந்த்ரே, ஏ. என். கிருஷ்ண

ராவ், கிருஷ்ணகுமார், "ஸ்ரீரங்க", "ஸம்ஸா", சி. கே. வெங்கடராமய்யா ஆகியோர் பிரபல நாடகாசிரியர்களாவார் கள்.

கன்னட கவிதை நாடகங்களை ஒரு முக்கிய அம்சமாகக் குறிப் பிடலாம். கோவிந்த பய், கே. வி. குட்டப்பா, வி. கே. கோகக், ஆர். எஸ். முகலி, பி. டி. நரசிம்மாச்சார் ஆகியோர் இத் துறையில் ஈடுபட்டுள்ள சிலர். இவை மேடைகளில் நடிக்கப் பட்டும் வருகின்றன. சிறிய ஆப்பராக்களும் பிரபலமடைந் துள்ளன. ஆனால் சமூக நாட கங்கள் தான் கன்னடத்தில் பிரதான நாடகங்களாக இருந்து வருகின்றன. அவை சுத்தமான பேச்சு நடையில் எழுதப் பட்டுள்ளன.

கீர்த்திபெற்ற அமெச்சூர் கோஷ்டிகள் இந்த நாடகங் களைக் கிராமாந்தரங்களிலும் நடத்தி வருகிறார்கள். இவைக ளில் பாட்டும் கூத்தும் கிடை யாது. இவை வெற்றிகரமாக நடப்பதால், தொழில் ரீதியில் நாடகம் நடத்தும் கலைஞர்களும் இவைகளை நடத்த ஆரம்பித்து விட்டனர். பொதுமக்கள் ஆதரவு ஏராளமாகக் கிடைக்கத் தொடங்கி விட்டதால், இம்புதிய நாடகங்கள் வளர்ச்சி யடையும்.

முன்ஷி பிரேம் சந்த்

அமிருத ராய்

இந்திய தேசிய இயக்கம் மலர்ந்த அதே காலத்தில் பிரேம் சந்த் பிறந்தார். அது 1881ம் வருஷம். சுதந்திர தாகத்தின் சின்னமாக வளர்ந்தது தேசியக் காங்கிரஸ். அந்த ஆர்வம் அவரையும் தழுவியது. வங்காளத்தின் பிரிவினே, சுதேசி இயக்கம் போன்ற சமூகத்தைக் குலுக்கும் சம்பவங்கள் நேர்ந்த கட்டத்தில்தான் அவரது இலக்கிய வாழ்வு வாலிபப் பருவம் எய்தியது.

தேசிய இயக்கத்தின் தலைமை சட்ட பூர்வமான முன்னேற்றத்தில் நம்பிக்கை வைத்திருந்தது. ஆனால் ஜனங்களிடையே கிளறிவிடப்பட்ட விடுதலைக் கனல் ஜ்வாலைவிட்டது. அதன் அலைகள் பலவாறு மோதித் துடித்தன. பத்திரிகைகளில் தலைப்பில் வரும் செய்திகள் மாத்திரம் ஓர் எழுத்தாளனது சிந்தனைகளைச் செப்பம் செய்வதில்லை. தலைப்புகளினூடே பொங்கி எழும் சக்திகள், சாம்பல் போர்த்து மூடிய வருங்காலத் தீச் சுடர்கள்—சமுதாயத்தை விழிப்புறச் செய்யும் சர்வ சாதனைகளும் எழுத்தாளனுக்கு உத்வேக மூட்டுகின்றன.

காங்கிரஸ் இயக்கத்தோடு வீரத்தினால் செறிந்த, தியாகத்தினால் சிறந்த பயங்கர இயக்கங்கள் வேறு தோன்றின. இந்த இயக்கங்கள் பொதுஜன ஆதரவு பெற்று தேச விடுதலை பெறுவதில் தோல்வியுற்றது உண்மை. ஆனால் உயிரைத் திரணமென மதித்து உன்னதமான தியாகங்கள் புரிந்த இளைஞர்கள், மக்களிடையே பிரிட்டிஷ் ஆட்சியின் மேல் எல்லையற்ற வெறுப்பையும், ஆத்திரத்தையும் பரப்பினர் ; ஆவேச பூர்வமான தேசாபிமானத்தை நாட்டினர்.

1908-ம் ஆண்டு தொழிலாளி வர்க்கம் அரசியல் அரங்கத்திலே கால் வைத்தது. லோகமான்ய திலகர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து பம்பாய்த் தொழிலாளர் கண்டன வேலை நிறுத்தம் செய்தனர். தேசிய இயக்கத்தின் கர்ஜனையிலே தொழிலாளி வர்க்கத்தின் குமுறல்களும் கலந்து முழங்கின. இதனால் தேசிய இயக்கம் புஷ்டியடைந்தது. மிதவாதிகளின் சட்ட வாதமாகவும், தலைப்பாகைகளின் தமாஷாவாகவும், பெட்டிஷன் போடும் சங்கமாகவும் இருந்த காங்கிரஸ், நவஜீவன் பெற்று தேசத்தின் குரலாக முகிழ்த்தது. இந்தப் பொதுஜன

சுதந்திர இயக்கத்தைப் போற்றிப் புகழ்ந்தார் பிரேம் சந்த்.

கிட்டத்தட்ட 1901-ம் வருஷத்தில்தான் பிரேம்சந்த் சியாமா என்னும் முதல் நாவலை எழுதினுர். பிரிட்டிஷ் ஆட்சியின் அநீதிகளைத் தோலுரித்துக் காட்டும் நூல் இது. (இப்போது இந்தப் புத்தகம் இல்லை) பிரிட்டிஷ் எதிர்ப்புணர்ச்சியைப் பிரதிபலிக்கும் பல கதைகளை அவர் எழுதினுர். அவை ஒரு கோவையாக வெளியிடப்பட்டன. 1906-ல் அரசாங்கம் இதைப் பறிமுதல் செய்துவிட்டது. அப்போது பிரேம்சந்த் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர். அரசாங்கப் பள்ளிக்கூடம்; கேட்பானேன் ஆபத்துக்கு. அதிகாரிகள் கண்ணை உருட்டினர். சொந்தப் பெயரை மாற்றிப் புனைப் பெயரில் எழுத நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தனபதிராய் அவரது சொந்தப் பெயர். நவாப் ராய் என்ற புனைப் பெயரில் எழுதத் தொடங்கிப் பின்னுல் பிரேம் சந்த் என்று மாற்றிக் கொண்டார்.

வாழ்க்கையிலும், இலக்கியத்திலும் பிரேம்சந்த் பிடிப்புள்ள ஜனநாயக வாதி. ஜனங்களிடத்தில் அபாரமான அன்பு—நெருங்கிய தொடர்பு கொண்டவர். பேனுவை ஒளி வீசும் கத்தி போலப் பாவித்து மக்கள் நலங் கருதி உழைத்தார், அரசியல். சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் கிளம்பும்போது அவை ஜனங்களுக்கு சாதகமா, பாதகமா என்ற ஒரே உரை கல்லில் பரிசீலனை செய்வார். எனவே அவரது எழுத்துக்களில் செயல் முறையில் சோஷலிஸம் ததும்புவதைக் காணலாம். அவர் ஒரு விஞ்ஞான சோஷலிஸ்ட் அல்ல. ஆனுல் சத்தியத்தின் முகாமில், சரித்திரத்தின் பாசறையில் அவர் நின்ருர். பாரத மறுமலர்ச்சிக்கு அஸ்திவாரமாக இருந்த கலைஞருக்குள் தலை சிறந்தவர் பிரேம் சந்த்.

விஞ்ஞான ரீதியான சோஷலிஸத்திற்கும், பிரேம்சந்தின் சிந்தனு வளர்ச்சிக்கும் பொதுவாக இருந்த சக்திதான் மக்கள். மக்களின் அபிலாஷைகளை அஸ்திவாரமாகக் கொண்டே எழுப்பப்பட்ட அவரது கற்பனைக் கோபுரம் காற்றுவாக்கிலே கனவு காணப் போகவில்லை. அனுபவம் என்னும் ஆகுதியில் அரங்கேறின அவரது ஆதர்சங்கள். புத்தகங்களிலிருந்தும் அவர் புதுமைகள் கண்டார். புத்தகப் படிப்பில் பேராசையுள்ளவர். ஆனுல் வாழ்க்கை என்னும் புத்தகத்திலேயே அவர் அதிகமாகத் தெரிந்துகொண்டார்.

இந்த முற்போக்கு எண்ணங்கள் அவர் மனதில் உதயமானது தேசிய இயக்கத்திற்குப் புறம்பாகவல்ல. ஆனுல் அவை தேசிய இயக்கத்தின் முன்னேடிகளாக வளர்ந்தன. பொது ஜனங்களுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கு மாற்றும் கண்டார் அவர். அவர் கண்ட நீதிகளை—சமூக பொருளாதார தர்மங்களை தேசிய இயக்கம் பிற்காலத்தில் அங்கீகரித்தது. எனவே நிகழ்கால நடப்புக்

களின் சரித்திராசிரியனாக மட்டுமின்றி வருங்காலத்தின் வான முகட்டில் புகுந்து பார்க்கும் தீர்க்கதரிசியாகவும் பிரேம்சந்த் திகழ்ந்தார்.

வாழ்க்கையில் ஜனநாயகவாதி; இலக்கியத் துறையில் யதார்த்தவாதி என்ற முறையில் கண்டதை அப்படியே சித்திரித்தார் அவர். யதார்த்த உண்மைகளை வான வில்லின் வர்ண ஜாலங்கட்டி ஆனந்தக் கற்பனைக்குள் அடைக்கவில்லை. மாயமென்னும் இருட்குகையில் புதைக்கவில்லை. ஆகவே அவரது சித்திரங்கள் ஜிவனுடன் மிளிர்கின்றன.

சில கதைகளில் மேலோட்டமான முடிவுகளைக் காணலாம். பாத்திரங்களின் செயல்களுக்கு ஒவ்வாத முடிபுகளைக் காணலாம். இதற்குக் காரணம் கலைஞரின் மனதில் விட்டகுறை தொட்ட குறையாக ஒட்டி நிற்கும் பத்தாம்பசலி எண்ணங்களே. முதலாளித்துவ சமுதாயம் "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்று முழங்குகிறது. ஆனால் இது கற்பனையில் நிற்கிறதே ஒழியக் காரியத்தில் பாய்வதில்லை. முதலாளித்துவம் உண்மையான சமத்துவத்தை நிலைநாட்ட முடியாது. அதன் அஸ்திவாரமே அசமத்துவம் தானே. ஏழை பணக்காரனென்றும், இந்த நிறம் அந்த நிறமென்றும், மேல் சாதி கீழ்சாதி என்றும், ஆண் பெண் என்றும், வேற்றுமை வித்தை விதைத்திருப்பது முதலாளித்வ சம்பிரதாயம். புதைந்துவரும் பிரபுத்துவ சமுதாயத்தை எதிர்த்துப் போராடும் முதலாளித்துவத்தின் யுத்தகோஷம் "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்." ஆனால் முதலாளித்துவத்தின் அந்திய காலத்தில், அழிந்துவரும் அதன்வாழ்வில் இவை வெறும் வெளிச்சம் போடும் வெற்றுச் சொற்களாகி விடுகின்றன.

இந்த உண்மையை பிரேம் சந்த் நன்குகஉணர்ந்திருந்தார். முதலாளித்துவத்தின் திருவிளையாடல்களை உணர்ந்து—முகவேஷத்தைக் களைந்து—சோஷலிஸப் பாதையில் செல்லுவதே புதுமைக் கலைஞனின் வழி என்பதைக் கண்டார்.

இந்த எண்ணங்களை கோதான் மங்கள சூத்ர போன்ற நவீனங்களில் பரக்கக் காணலாம். உதாரணமாக மங்கள சூத்ரத்திலிருந்து ஒரு பகுதியைக் கீழே தருகிறேன்.

"பண்டித தேவகுமாரை (கதாநாயகன்) பயமுறுத்துவது எளிதல்ல. ஆனால் வாழ்க்கையின் தர்க்கரீதியான முடிவை அவர் ஏற்றுக்கொண்டே தீர வேண்டும். புதிரை விடுப்பதில் அவர் முனைந்தார். சமுதாயத்திலே இந்த அராஜகம் ஏன்? 'கர்மம்' என்ற நம்பிக்கையும் பூர்வஜென்மத்தில் விதைத்த விதைக்கு தகுந்த பயிர் என்ற வேதாந்தமும் அவருக்குத் தக்க பதில் கொடுக்கவில்லை. ஆண்டவனிடமிருந்து சர்வ ஜீவராசிகளும் பிறந்தன என்ற தத்துவத்தில்

அவருக்கு திருப்தி ஏற்படவில்லை உலகம் ஏகமென்றால் ஏனிந்தப் பாகுபாடுகள்? எலும்பு முறிய இரத்த வியர்வை சிந்த உழைத்தும் ஏன் சிலர் பட்டினி கிடக்க வேண்டும்? விரலைக் கூட அசைக்காத சிலர் ஏன் மலரணையிலே சுகமனுபவிக்க வேண்டும்? எல்லோரும் சமமென்ற பேச்சு எழும். ஆனால் அது உண்மையா?

"உலகம் ஒரு பரந்த சந்தை. வேண்டியதை வாங்கலாம். நீதியைப் பாருங்கள்? ஏழை ஒருவன் வேறு ஒருவர் நிலத்திலிருந்து ஒரு கொத்து நெல் பிடுங்கினால் சட்டம் தண்டனை விதிக்கிறது. ஆனால் பணக்காரன் ஒருவன் பட்டப்பகலில் பலரைக் கொள்ளையடிக்கிறான். சட்டம் அவனை நெருங்குவதில்லை; நேர்மாறாக அவனுக்குப் பட்டமும் பதவியும் கொடுக்கப்படுகின்றன.

"சன்னியாசிகள் உலகம் பொய் என்று உன்மத்தப் பேச்சுகள் பேசி—உள்ளத்திலே அச்சமும் பேடிமையும் வளர்ப்பவர்கள் தியாகத்தை விலை பேசுபவர்கள்.

"உண்மைவான சன்யாசியார்? நீதிக்காகப் போராடி—சாவிற்கும் துணிந்தவன், கடவுள்—விதி—வழிபாடு என்ற பேரால் மூடக் கட்டுகளை மாத்திரம் வளர்ப்பவன் சமூக கோரங்களை மூடி மறைக்கிறான், மனிதருள் மனிதனாக—சமூகத்தில் தலை காட்டும் மிருக சக்தியோடு மல்லாடி முன்வர வேண்டும். அதுவே மனிதனின் மகத்தான கடமை.

"சமுதாயத்தில் இன்றுள்ள கோணல் மாணல்களை, அராஜகத்தை உணராத கண்ணிருந்தும் கண்ணிலிகளாக இருப்பது என்ன பேதமை. உலகத்தை தியாகம் செய் என்று உளுத்த வேதாந்தம் பேசி மூடத்தனத்துக்கு முடி சூட்டுவிழாச் செய்வதே இவர்கள் வேலை. மனித சமூகம் விழிப்புடனிருந்து புதிய ஆதர்சங்களை ஏற்று விடுதலைப் பாதையிலே விரையவேண்டும்"

ஒட்டும் - தீட்டும்

(கு. சின்னப்பா பாரதி)

வானமது தன்துயரைக் கூற—கண்ணீர்
வடிப்பதுபோல் மழைநீரும் கொட்டும்
மோனமிகு வானரக்கன் எழுந்து—முரசை
முழக்குதல்போல் இடிமுழக்கம் கேட்கும். (1)

கோரமிகு புயற்காற்றுப் பெயர்ந்து—இடியின்
கொடுமைதனைக் கண்டஞ்சிச் சீறி
சீரற்ற மண்குடியில் பதுங்கக்—கூரை
சொல்லாமல் வாய் பிளந்து அலரும். (2)

கொட்டுகின்ற வான் மழையும் விரைந்து—கூரை
பிளந்திட்ட கால்வழியாய் ஒழுகும்
சொட்டுகின்ற மழைநீரில் நனையக்—குப்பன்
சோறின்றிச் சேரியிலே கிடந்தான். (3)

வேலிப்பூத் தோட்டமெங்கும் சுற்றி—காலை
வேளையிலே முகமலர்ந்து நிற்க
காலைப் புலருமுனம் செல்வான்—பண்ணைக்
கடிமை செய்தலுத்துப் போவான். (4)

கோழிக் கூவுமுனம் செல்வான்—நாய்கள்
குறுகி உறங்கிய பின் வருவான்
மேழி பிடித்துழுதல் முதலாய்—மலத்தை
எடுக்கும் தொழிலனைத்தும் செய்வான். (5)

நிலத்தின் பிரபொருவன் அண்டை—அவனும்
நினைவு தெரிந்த முதல் உழைத்தான்
உழைத்து அவனடைந்த செல்வம்—தேகம்
உருக் குழைந்து போன தொன்றே. (6)

பொட்டல் நிலமெனவேக் கிடந்த—கழுதை
புரள முடியாத நிலத்தைத்
திட்டு மிகநிறைந்த இடத்தை—அவனும்
செல்வம் விளை நிலமாய்ச் செய்தான். (7)

வெட்டியவன் எடுத்த மண்ணைச்—சரியாய்
வகுத்துச் சுவரொன்று செய்தால்
எட்டி வானினது முகட்டை—வெய்யோன்
எழுந்து கடக்காமல் செய்யும். (8)

கொட்டிக் கரையாகப் போட்டால்—சுற்றிக்
கடலையும் வளைத்திடக் கூடும்
சொட்டியவன் வடித்த வேர்வை—சேர்த்தால்
சூழும் பெருங்கட லாகும். (9)

கீரை முதலாகக் கொண்டு—வயலில்
கனிகாய் முதலாக மற்றும்
சீரிய நவதான்யம் வரையும்—அவன்
செவ்வனே வளைத்துக் கொடுத்தான். (10)

புவியிலுள்ள பொருள்கள் யாவும்—அவன்கை
பட்டுப் பிறந்திட்ட போதும்
தவிக்கும் அவனுடல் என்றும்—தூரத்
தாண்டியே நின்றிட வேண்டும். (11)

தாகம் மிகுந்திட ஓர்நாள்—கிணற்றில்
தண்ணீர் அவன் இறங்கிக் குடித்தான்
காகம் பறப்பதுபோல் வந்த—பண்ணைக்
கனவான் இதைக் கண்டு விட்டான். (12)

"சக்கிலிக்குப் பிறந்த பயலே—இந்தச்
சண்டித்தனம் உனக்கு எதற்கு
கக்கி விட்டாயடா தீட்டை—இந்தக்
கிணற்று நீரனைத்தும் எல்லாம். (13)

தீண்டத் தகலாகா நாயே—உன்னைச்
சும்மா விட்டேனு பாரென்று"
தாண்டியவனை யுதைத் திட்டான்—அவனும்
சுருண்டு தரையில் விழுந்திட்டான். (14)

மூர்ச்சை யவன்தெளிந்த போது—மரத்தில்
மோதவேக் கட்டப்பட் டிருந்தான்
கூறிய விலாருடன் கையில்—பிரபு
கடிபட்ட நாய்போல் நின்றுன். (15)

" தாகத்தைத் தீர்த்திட நானும்—கிணற்றில்
தண்ணீரும் குடித்திட்ட போழ்தில்
வேகமாய் என்னுடை தீட்டும்—நீரில்
விரைந்துமே சென்றிட்ட தென்றல். (16)

தீஞ்சுவை மிகத்தரும் பழமும்—நன்கு
செழித்து விளைந்திட்ட பொருளும்
கொஞ்சங் கொஞ்சமாக நாளும்—எந்தன்
கைபட்டு விளைந்தது தானே. (17)

தோட்டத்திலே யுள்ள தனைத்தும்—கையால்
தொட்டுக் கொணர்ந்துங்கள் வீட்டில்
போட்ட பின்னரதை யுண்டால்—தீட்டும்
பட்டுக் கெட்டுப் போயிடாதோ ? (18)

என்னுடல் தீட்டென்று சொன்னல்—என்னல்
உருக்கொண்டு விளைந்திடும் பொருளும்
திண்ணமாய்த் தீட்டாவ தன்றி—சற்றும்
தூய்மையாய் இருந்திடு மாமோ ? (19)

தீட்டுடை எம்போன்றோர் படைக்கும்—செல்வத்
திரளெல்லாம் உயர்குலத் துள்ளோர்
நீட்டிக் கரங்கொண்டு என்றும்—சற்றும்
நாடாமல் இருப்பதே நேர்மை ". (20)

என்றே யவன்சொல்லும் போது—அடியும்
எழும்பிற்று உடல்முழு தெங்கும்
கன்றியவன் உடல் எங்கும்—ரத்தம்
கசிந்துமே சொட்டிட லாச்சு. (21)

கொட்டத்தைப் பாரிந்த நாய்க்கு—கூழும்
குடிப்பதற் கில்லாட்டி யென்றே
கட்டை யவிழ்த்துமே பிரபும்—அவனைக்
காலாலே எட்டி யுதைத்தான். (22)

குட்டிக் கரணத்தில் வீழ்ந்தான்—வாயில்
குப்பென ரத்தமும் கொட்ட
விட்டில் பூச்சியாகத் துடித்தான்—விரைவில்
விண்ணகம் சென்றுமே சேர்ந்தான் (23)

“ என்ன கொடுமையி தந்தோ—மக்காள்
இன்னும் உறக்கமா வேண்டும்
என்னாளும் பேருள்வகை செய்யும்—உழைக்கும்
எண்ணற்றோர் தீண்டாதா ரென்று (24)

சொல்லிக் கொண்டே யொருகூட்டம்—புவியில்
சொகுசாக உயர்ந்தவர் என்றே
தொல்லைக் கொடுத்துமே வாழ—நீங்கள்
தூக்கத்தில் இருப்பதும் நன்றோ? (25)

உயர்த்திப் பிடியுங்கள் வாளை—உலகில்
உயர்வு தாழ்வெங்கணு முண்டோ?
முயற்சியோ டங்கெலாம் சென்றே—முனையும்
இல்லாமல் அழித்துச் சிதைப்பீர்! (26)

உழைப்பாளர் உலகந்தான் இன்று—உலகை
உய்ய வைப்பது கண்டீர்!
உழைப்பிற்கே மதிப்பங்கு உண்டு—யாரும்
உயர்வு தாழ்வென்பது கிடையா! (27)

திடுமெனப் புறப்பட்டுச் செல்வீர்!—உங்கள்
சுதந்திரம் பிழைத்திட வைப்பீர்!
கடுகேனும் ஐயத்தைக் கொள்ளீர்—உலகில்
கண்ணியம் தழைத்திடச் செல்வீர்!